வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 16.09.2021 வியாழக்கிழமை | இதழ் : 285 | பக்கங்கள் : 16

# அரசியல் கைதிகளை காண அ'புரம் விரைகிறார் நாமல்!

## லொஹானின் மோசச்செயல் குறித்து ஆராய்வார்

கொழும்பு, செப்ரெம்பர் 16

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிட வைத்தார் என்ற குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நேற்று பதவி விலகியதன் பின்னணியில்-

அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று வியாழக்கிழமை அனுராதபுரத்துக்கு செல்லவுள்ளார்.

15



தியாகதீபம் திலீபன் 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதத்தை ஆரம்பித்த நாளான நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அவரின் நினைவுத்தூபியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

வடக்கில் 59 தொற்றாளர்

## ஒரு வயது குழந்தை உட்பட 4பேர் கொரோனாவுக்கு பலி!

யாழ்ப்பாணம், செப். 15

பருத்தித்துறையில் ஒரு வயது 3 மாதம் நிரம்பிய குழந்தை, குழந்தை ஒன்றை பிரசவித்த தாயார் ஒருவரும், யாழ். மாநகரை சேர்ந்த ஒருவருமாக யாழ். மாவட்டத்தில் 3 பேரும்,

15

## 132 பேர் தொற்றால் மரணம்!

கொழும்பு, செப். 16

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 132 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரி

15

## தீர்மானமும் பொறுப்புக்கூறலும் பேரவையிலேயே முடங்கும்நிலை!

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

போர் குற்றவாளியான ஜனாதிபதியின் அரசாங்கத்தை நம்பி, இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பொறுப்புக்கூறல் என்பன மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று அவர் மெய்நிகர் வழியே நடத்திய ஊடக சந்திப்பிலேயே

15

## தமிழர் பிரச்னை தீர்வுக்கு புதிய அரசமைப்பு தேவை

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது அவசியம். இருப்பினும், இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் ஏதும் இனப்பிரச்னைக்கு தீர்வு

15

## சர்ச்சைக்குரிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பதவி விலகினார்!

கொழும்பு, செப். 16

சிறைச்சாலைக்குள் துப்பாக்கி காட்டி தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிட வைத்த சம்பவத்தின் எதிரொலியாக எழுந்த எதிர்ப்பை அடுத்து சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு பொறுப்பேற்றுதான் பதவி விலகுவதாக

15



## இந்திய வெளிவிவகார செயலருடன் மிலிந்த மொறகொட நேற்று பேச்சு



புதுடில்லி, செப். 16

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிறி ஹர்ஷ வர்தன் சிறிங்கலவை இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் மிலிந்த மொறகொட நேற்று சந்தித்துப் பேசியுள்ளார். புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் இச்சந்

15

## இராஜிநாமா மட்டும் போதாது; லொஹானை கைது செய்யுங்கள்

### வலியுறுத்துகின்றது கூட்டமைப்பு

கெகாழும்பு, செப். 16

லொஹான் ரத்வத்தே, இராஜாங்க அமைச்சு பதவியை இராஜிநாமா செய்வது மட்டும் போதாது. அவர் கைது செய்யப்பட்டு முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இந்த சம்பவத்துடன் தொடர்

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

ஒரு பாடசாலையில் ஆசிரியர் ஒருவருக்கு மதிய உணவுக்குப் பிறகு சற்று நேரம் கண்ணயராமல் இருக்க முடியாது. மாணவர்களைப் பாடம் படிக்கச் சொல்லி விட்டு அவர் வகுப்பறையிலேயே சற்று நேரம் தூங்கு வது வழக்கம்.

மாணவர்கள் அவரைக் கேலி செய்வார்கள். ஏன் இப்படி வகுப்பில் தூங்குகிறீர்கள் என்று கேட்பார்கள்.

அதற்கு அவர் திறமையாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு, தான் தினமும் கனவுலகிற்குச் சென்று வருவ தாகவும், அங்கே பல பண்டைய காலத்து ஞானிகளை சந்தித்து வருவதாகவும் கூறுவார்.

ஆசிரியர் எதிர்பாராத ஒருநாளன்று அவர் வகுப்புக் குள் நுழையும் நேரம் அனைத்து மாணவர்களும் தூ ங்குவது போல் படுத்துக் கிடந்தார்கள். திடுக்கிட்ட ஆசிரியர் பிரம்பால் அனைவரையும் தட்டி எழுப்பித் திட்டினார். ஏன் வகுப்பில் தூங்கினீர்கள் என்று கேட்டார்.

மாணவர்கள் ஒரே குரலில், கனவுலகிற்குச் சென்று, தாங்களும் ஞானிகளைப் பார்க்கச் சென்று வந்தனரெ னக் கூறினார்கள். வாத்தியார் முகத்தில் ஈயாடவில்லை.

சில நாட்களாக நமது அரசியல்வாதிகளுக்கும் ஊட கங்களுக்கும் தீனி போட்டுவந்த ஜெனிவாக் கூட்டத் தொடரில் நமது விவகாரம் முடிந்துவிட்டது. இனி அடுத்த பெப்ரவரிக்கு பேரவையின் அடுத்த கூட்டத் தொடருக்கு சில நாட்கள் இருக்கும்போது மீண்டும் காட்சிகள் தொடங்கும். அதுவரை அன்று அன்று நடக் கின்ற சின்ன விடயங்ளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கப் போகின்றோம்.

இந்த நாற்பத்தியெட்டாவது கூட்டத்தொடர் நமக்கு ஓர் உண்மையை புலப்படுத்தியிருக்கின்றது.

மனித உரிமைகள் பேரவை அரசியல்வாதிகளின் கருத்துக்களை கவனத்தில் கொள்வதில்லை என்றும் அது தனக்கு அறிக்கையிடுவதற்காக நியமித்திருக்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகளையே கவனத்தில் எடுக்கும் எனவும், பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாவற்கு முன்னதாக நமது தலைவர் ஒருவர் தெரி வித்திருந்தமை முழுக்க முழுக்க சரியானது என்பதை அறிந்துகொள்ள முடிந்திருக்கின்றது.

அதாவது, அரசியல்வாதிகளின் கருத்துக்களையன்றி, தரகர்களின் கருத்துக்களையே கவனத்தில் கொள்ளும் என்பதே அந்தச் செய்தி.

இதைவிட, நாம் கவனிக்க வேண்டியது, சம்பந்தன் ஐயா கடிதம் எழுதிய பின்னர் பேரவை கூடுவதற்கு முதல் நாள் நமது சுமந்திரன், பேரவை அலுவலகத்து டன் தொடர்புகொண்டு, சம்பந்தன் ஐயாவின் கடிதம் கிடைத்தது குறித்து உறுதிப்படுத்தியதோடு நின்றுவிட வில்லை. அதிலுள்ள இரண்டு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன என்பதையும் உறுதிப்படுத்தியதாகவும் ஒரு செய்தி வந்தது.

அவர் உறுதிப்படுத்தியது ஜனாதிபதி பிரகடனப் படுத்தியிருந்த அவசரகாலச்சட்டம் தொடர்பானது ஒன்று. சம்பந்தன் அதனைக் குறிப்பிட்டிருக்காவிட்டால் அம்மையார் அதனை கவனத்தில் எடுத்திருக்கமாட்டார் என்பதை தமிழ் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இரண்டாவது, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஜனாதிபதி என்ன கருத்தைக் கொண்டிருக் கிறார் என்பது தொடர்பாக அண்மையில், நீதி அமைச் சர் அலி சப்ரி தெரிவித்திருந்த கருத்து. சம்பந்தனின் கடிதத்தில் இருந்த அந்தக் கருத்தையும் ஆணையாளர் கவனத்தில் எடுத்திருக்கிறார் என்றே சுமந்திரன் தொடர்பு கொண்டவர்களால் அவருக்கு தெரிவிக்கப் பட்டிருந்தனவாம்.

ஆனால், அம்மையார் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஜனாதிபதி கடந்த ஜூனில் தெரிவித்திருந்த கருத்துக் களை பாராட்டியிருக்கிறார். அதனை செயல்முறையில் காட்டவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். இதைத்தான் சம்பந்தனும் வலியுறுத்தியிருந்தாரோ என்று கேட்கவேண்டும் போலத் தோன்றுகின்றது.

இந்தக் கூட்டத்தொடரில் அம்மையாரின் வாய்மூல அறிக்கையில் சம்பந்தன் குறிப்பிடாமல் விட்டிருந்தா லும் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது குறித்து தெரிவித்திருக்கத் தவறியிருக்கமாட்டார் என்பது குழந்தைகளுக்கும் தெரிந்த ஒன்றுதான்.

எது எப்படியோ நமது கடிதங்களை ஆணையாளர் கண்டுகொள்வதில்லை என்பதை தெரிந்துகொண்டும் நமது தலைவர்கள் கடிதங்களை அனுப்பிக்கொண்டே இருப்பர்கள். அவர்களுடைய நினைப்பெல்லாம் நாம் மேலே கூறிய அந்த ஆசிரியரின் நினைப்புத்தான்!

**- ஊர்க்குருவி**

# ஐ.தே.க. தலைவர் ரணில் உள்ளிட்டோருக்கு இடைக்கால தடை!

## கொழும்பு நீதிமன்று விதித்தது

கொழும்பு, செப். 16

நாடளாவிய ரீதியில் உள்ளூ ராட்சி மன்றங்கள் பலவற்றை பிரதி நிதித்துவம் செய்த, ஐக்கிய தேசிய கட்சியின் 21 உறுப்பினர்களை கட்சியிலிருந்து வெளியேற்றியமை ஊடாக ஏற்பட்ட வெற்றிடங்களுக் காக, வேறு நபர்களை பெயரிடுவதை தடுத்து, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட சிலருக்கு இடைக்கால தடை விதிக்கப்பட் டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் இதற்கான உத்தரவை நேற்று புதன்கிழமை பிறப்பித்தது.

வெளியேற்றப்பட்ட உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள் 21 பேர் தாக்கல் செய்த முறைப்பாடுகளை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதி வான் அருண அளுத்கே, எதிர்வரும் 29 ஆம் திகதிவரை அமுலில் இருக் கும் வண்ணம் இந்த இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

பத்தேகம பிரதேச சபையின் உறுப்பினர்களாக கடமையாற்றிய மஞ்சுள வசந்த, பி.எச். லியனகே, கொழும்பு மா நகர சபையின் உறுப் பினர் கமச்சிகே விஜயதாச உள் ளிட்ட பல உள்ளூராட்சி மன்றங் களை சேர்ந்த 21 பேர் இந்த முறைப் பாடுகளை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடுகளில் பிரதி வாதிகளாக பெயரிடப்பட்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலர் பாலித ரங்கே பண்டார, அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கி ரமசிங்க, அக்கட்சியின் ஒழுக் காற்று குழு செயலர் சமிந்த ஜயசேகர ஆகி யோருக்கே இந்த இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அடுத்த தவணையின் போது அவர்க ளை மன்றில் விளக்க மளிக்கவும் அறிவித்தல் அனுப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்ததாக குற்றம் சாட்டி, ஐ.தே.க. உறுப்புரி மையிலிருந்து முறைப்பாட்டா ளர்கள் 21 பேரையும் நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது சட்டத் துக்கு புறம்பானது எனக் கூறி இந்த வழக்கை பாதிக்கப்பட்ட வர்கள் நீதி மன்றை நாடியமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# நிதி சட்டமூலம் நடைமுறையானது

கொழும்பு, செப்.16

வெளிப்படுத்தப்படாத சொத்துக் களை முதலீட்டிற்கு பயன்படுத்த அனுமதி வழங்கும் நிதி சட்டமூலம் நேற்று முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் உறுதிப்படுத் தலுடன் இந்த சட்டமூலம் பயன் பாட்டிற்கு வந்துள்ளது.

வெளிப்படுத்தப்படாத சொத்துக் களை முதலீட்டிற்கு பயன்படுத்த அனுமதி வழங்கும் நிதி சட்டமூலம் திருத்தங்களுடன் கடந்த 7 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 134 வாக்குக ளும் எதிராக 44 வாக்குகளும் அளிக் கப்பட்டன. இதன் மூலம், வெளிப் படுத்தப்படாத சொத்துக்களை இந்த சட்ட மூலத்தினூடக சட்டரீதியான தாக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருகோணமலையில் கிளைமோர்கள் மீட்பு

திருகோணமலை, செப். 16

மூதூர் மேம்கமம் பகுதியில் வாய்க் கால் அருகே இரு கிளைமோர் குண் டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், இந்த கிளைமோர்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இரண்டு கிளைமோர் குண்டுக ளையும் செயலிழக்க செய்வதற்கு மூதூர் நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

**16.01.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**16.01.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
16.09.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# உண்மையான ஏமாளிகள்?

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, கடந்த சில நாட்களாக இடம்பெற்றுக் கொண்டிருந்த, கடிதங்கள் மூலமான அரசியல் முடிவுக்கு வந்துவிட்டது. இனி இது தொடர்பில், அடுத்த பெப்ரவரி மாதம்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் விவாதம் செய்யும். ஏனெனில், ஜெனிவா விவகாரம் கிட்டத்தட்ட நல்லூர், செல்வச்சந்நிதி திருவிழா போன்றாகிவிட்டது. திருவிழாக்காலத்தில் மட்டும்தான் திருவிழா மீது ஒரு கவர்ச்சியிருக்கும்.

ஐ. நா. பேரவை ஆணையாளரின் அறிக்கையில் தமிழ் கட்சிகளின் கடிதங்கள் தொடர்பில் ஒரு சொல்கூட இல்லை. தங்களுடைய அலுவலகத்தினதும் இன்னும் பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்களினதும் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றே, ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒருவேளை கடிதங்களை அனுப்பியவர்கள் கூறக்கூடும், தங்களின் ஆலோசனைகள் மறைமுகமாக உள்வாக்கப்பட்டிருக்கின்றன என்று - ஆனால், அதனை மக்கள் ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாது. தமிழ் அரசு கட்சி - அதிலும் தற்போது இரண்டு விதமான அபிப்பிராயங்கள் உள்ளன - அவர்கள் சம்பந்தனின் கையெழுத்துடன் செல்லும் கடிதம் மட்டும்தான் கருத்தில் கொள்ளப்படும் என்று வாதிடலாம்.

சுமந்திரன் அதனைத்தான் பல்வேறு இடங்களிலும் கூறிவருகின்றார். ஆனால், அதற்கும் எந்தவோர் ஆதாரமும் இல்லை. பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூறக்கூடும், தாங்கள் அனுப்பும் கடிதம் அங்கு கவனத்தில் கொள்ளப்பட்டதாக. ஆனால், அனைத்துமே சாதாரண உள்ளூர் அரசியல் பிரச்னை மட்டுமே! ஏனெனில், அரசியல் கட்சிகள் அனுப்பும் கடிதங்களில் என்னதான் வாதங்கள் கூறப்பட்டிருந்தாலும்கூட, அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிநிரல் குறுகிய எல்லைக்குள்தான் இருக்கும் என்னும் மதிப்பீட்டுடன்தான் ஐ. நா. அதிகாரிகள் விடயங்களை நோக்குவார்கள். ஆனால், ஒருவேளை அனைத்து தரப்புக்களும் ஒன்றிணைந்து, ஒரு குரலில் சில விடயங்களை வலியுறுத்தும்போது, ஒருவேளை அதற்கு சற்று கூடுதல் முக்கியத்துவமளிக்க வாய்ப்புண்டு. ஆனால், அவ்வாறு இங்கு நிகழவில்லை.

கடிதங்கள் மூலம் மோதிக் கொண்டவர்கள் ஆங்காங்கே தெரிவித்த கருத்துக்களை நோக்கினால், மற்றவர்களை விடவும் தாங்களே புனிதர்கள் என்பதைக் காண்பிக்கும் முயற்சியாகவே இருந்தது. அதாவது, தமிழ் அரசுக் கட்சியில் ஓர் அணியினர், சம்பந்தன் - சுமந்திரன், விடுதலைப் புலிகள் இயக்கத்தை போர் குற்றவாளிகள் என்று கூறிவிட்டனரெனவும் அதனால்தான் தாங்கள் இதில் உடன்படவில்லை என்றும் வாதிடுகின்றனர். மறுபுறம் சுமந்திரன் அணியோ - சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட்டவர்கள் என்று பொதுவெளிகளில் விமர்சிக்கின்றனர். உண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்து வம் வகிக்கும் அனைவருமே ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கங்களோடு சேர்ந்து இயங்கிவர்கள்தான். இதனையும் தாண்டித்தான், விடுதலைப் புலிகள் அவர்களுடன் இணைந்து செயல்பட்டனர். 2012இல், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆற்றிய, பாராளுமன்ற உரையொன்றில், தன்னை விடுதலைப் புலிகள் இயக்கம், அவர்களது கொலைப் பட்டியலில் வைத்திருந்ததாக வாக்குமூலம் வழங்கியிருக்கின்றார். விடுதலைப் புலிகள் அதிகாரத்தில் இருந்தபோது, அவர்கள் துரோகிகள் என்று கருதியவர்களையே கொலைப் பட்டியலில் வைத்திருந்தார்கள் என்பது மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டிருந்த விடயம். அவ்வாறாயின் சம்பந்தன்?

இன்று கூட்டமைப்பில் இருப்பவர்களுக்கும், தமிழ் அரசு கட்சியில் இருப்பவர்களுக்கும் உண்மையிலேயே புலிகள் மீது, விசுவாசம் இருந்திருந்தால், இப்போது எவருமே கூட்டமைப்பாக இருந்திருக்க முடியாது. ஒன்றில், சம்பந்தன், சுமந்திரனை கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றியிருக்க வேண்டும். அல்லது புலிகளின் விசுவாசிகளாக தங்களை காண்பித்துக் கொள்பவர்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும். இதில் எது நடந்திருந்தாலும் இப்போதைய கூட்டமைப்பு இருந்திருக்காது. உண்மையில், இவர்களின் செயல்பாடுகள் விடுதலைப் புலிகள் தொடர்பானது அல்ல, மாறாக, விடுதலைப் புலிகள் தொடர்பில் தமிழ் சமூகத்தில் ஆங்காங்கே காணப்படும் ஆதரவை, அனுதாபத்தை எவ்வாறு வாக்குகளாக மாற்றிக் கொள்ளலாம் என்பது தொடர்பிலேயே இவர்களின் முழு கவனமும் இருக்கின்றது. உண்மையிலேயே இதில் ஏமாந்து போகிறவர்கள் மக்கள் மட்டுமே! ஏனெனில், அரசியல்வாதிகள் என்போர் அனைவருமே தெரிந்தே அனைத்தையும் செய்கின்றனர். இவர்களின் முகத்தை தெரியாமல் ஏமாந்து போகிறவர்கள் மக்கள் மட்டுமே!



# அப்பா இன்னும் வரேல்ல...

*2009 போரின் இறுதிநாட்களில் பிறந்த குழந்தைகளுள் தமிழ்நிலாவும் ஒருவர். தந்தையின் தழுவலை உணரும் முன்னே தந்தையைப் பிரிந்த பெண் குழந்தை. 2009 மே 18 அன்று விடுதலைப் புலிகள் அமைப் பின் திரைத்துறை பிரிவின் போராளியான இவளின் தந்தை அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் இலங்கை இராணு வத்தினரின் அறிவிப்புக்கு அமைவாக முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் சரணடைந்த நாளிலிருந்தே காணாமல் ஆக்கப் பட்டிருந்தார்.*

*கடந்த 12 ஆண்டுகளாக அப்பா எங்கே? எப்போது வருவார்? என்ற கேள்விகளோடு காத்திருக்கும் தமிழ்நிலா, தந்தை அருகில் இல்லாத பிரிவை தினமும் அனுபவித்து வருகிறார். தந்தை இருந்தால் நான் எப்படி இருப்பேன் என்ற உள்ளக் கிடக்கையை எம்மோடு பகிர்ந்துகொள்ளும் தமிழ்நிலா போன்று, காணாமல் ஆக்கப்பட்ட அப்பாக்கள் எப்போது வருவார்கள் என்ற எதிர்பார்ப்போடு வாழும் குழந்தைகள் இந்த மண்ணில் ஆயிரமாயிரம்.*

*"என்ர பெயர் தமிழ்நிலா. நான் இப்ப ஏழாம் ஆண்டு படிக்கிறன். எனக்கு பன்னிரண்டு வயது. எனக்கு பட்மின்ரன் விளையாட்டுதான் பிடிக்கும். பிரண்ட்ஸ் சோட சேர்ந்து பள்ளிகூடத்தில் பட்மின்ரன் விளையாடுவன். எனக்கு டொக்டர் ஆகோணும் எண்டுறதுதான் இலட்சியம். அம்மா சொல்லுவா, அப்பா வருவார், நீ படிச்சு ஒரு நிலைக்கு வா எண்டு. அப்ப நான் யோசிப்பன், நான் படிச்சு டொக்டரானா, அப்பாவையும் பாக்கலாம் எண்டு.*

*"எனக்கு ரெண்டு அண்ணாக்கள். அம்மாவோடதான் இருக்கிறன். அண்ணாக்கள் என்மேல பாசமாவே இருப்பினம். அப்பா இல்லை எண்டு ஏதும் நான் சொன்னா அண்ணா சொல்லுவான் கவலைப்படாத அப்பா வருவார் எண்டு.*

*"நான் சின்னனில இருந்து அப்பாவை பார்க்கேல்ல... அம்மாட்ட கேட்கிறனான் அப்பா எங்க எண்டு, அவர் காணாமல் போயிட்டார் எண்டு அம்மா சொல்லுவா. அப்பாவை நான் நேர்ல பார்த்ததில்ல, படத்திலதான் பார்த்திருக்கன். அம்மாதான் சொல்லிருக்கிறா, நான் பிறந்து ரெண்டு மாசத்தில அப்பா ஆமிக்காரங்களிட்ட சரணடைஞ்சு பிறகு காணாமல் போயிட்டார் எண்டு. அப்பா எங்களோட முள்ளிவாய்க் காலில இருந்து வந்துகொண்டு இருக்கேக்க சரணடைய சொல்லி ஆமிக்காரர் ஸ்பீக்கர்ல அறிவிக்க பாதரோட சேர்ந்து சரணடைஞ்சவராம்.*

*"நான் பள்ளிக்கூடம் போன பிறகு யோசிப்பன், பள்ளிக்கூடம்விட்டு வீட்ட போகேக்க அப்பா வீட்ட வந்திருந்தா எப்பிடி இருக்கும் எண்டு யோசிப்பன். அப்படி இருந்தா எங்களுக்கு எவ்வளவு சந்தோசம். எனக்கு அப்பாவோட எல்லா இடமும் போக வேணும் எண்டு ஆசையா இருக்கும். அம்மா சொல்லுவா அண்ணாக்கள் சின்ன ஆட்களா இருக்கேக்க அப்பாதான் பாடம் சொல்லிக் குடுக்கிறவர் எண்டு. அப்படி அப்பா இருந்திருந்தா எனக்கும் பாடம் சொல்லித் தந்திருப்பார்தானே. மற்றப் பிள்ளையள் போல நானும் அப்பாவோட சந்தோசமா இருந்திருப்பன் எண்டு அடிக்கடி யோசிப்பன்.*

*"எங்கட வகுப்பில நிறைய பிள்ளையள் கார்ல, பைக்ல எல்லாம் பள்ளிக்கூடம் வருவினம், அவையள் அப்பாவோடதான் பள்ளிக்கூடம் வருவினம். எனக்கு அதை பார்க்கவே ஆசையா இருக்கும். அவையள் சொல்லுவினம் அப்பா புது கொம்பாஸ் வாங்கி தந்தவர் எண்டு. சொல்லும்போது நான் யோசிப்பன், எங்களுக்கும் அப்பா இருந்தா இப்படி எல்லாம் வாங்கி தருவார்தானே எண்டு. வீட்ட புதுசா யாரும் வந்தா அப்பாதான் வாறாரோ எண்டு நான் ஓடி போய் பாக்கிறனான். நான் அம்மாவை கேட்கிற நேரம் எல்லாம் சொல்லுவா, திருப்ப விடுதலை செய்வம் எண்டு அப்பாவை சரணடைய சொன்னவையள். அப்பா எங்கையோ இருக்கிறார், வருவார் நீ யோசிக்காத எண்டு சொல்லுவா.*

*"12 வருசமா அப்பாவை நான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறன். ஆனா, அப்பா இன்னும் வரேல்ல"*

*ஆயிரமாயிரம் தமிழ்நிலாக்கள் அப்பாக்கள் வரும்வரை 12 வருடங்களாகக் காத்திருக்கிறார்கள்.*

*குறிப்பு: சிறுமியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

*நன்றி - மாற்றம்*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 16 வியாழக்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 31
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

16.09.2021

**மேடம்**
உதவி செய்வதாக வாக்கு கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். சிறு நன்மைகளும் சில மன அழுத்தங்களும் உள்ள நாள். பொறுமை காரணமாகப் பிரச்னைகளை ஊதித்தள்ளுவீர்கள்.

**இடபம்**
குழந்தைகளின் மூலம் மகிழ்ச்சிகரமான செய்தி வரும். உறவினரின் உதவி கிடைப்பது பற்றி சந்தேகமே. பேச்சால் சிரமம் வரலாம். வாழ்வில் முன்னேற சில புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்**
தைரியம் கூடும் நாள். நல்லவர்களுக்கு நெருக்கமாவீர்கள். பயணங்களால் நன்மை கிட்டும். வருமானம் பெருகும். வியாபாரத்தில் போட்டிகள் விலகி இலாபம் பார்ப்பீர்கள்.

**கடகம்**
பொருட்களின் சேர்க்கை மனதிற்கு மகிழ்ச்சி தரும். சுபநிகழ்ச்சிகள் பற்றிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். நீண்ட நாட்களாக இருந்த தடை விலகி வாய்ப்பு கிடைக்கும்.

**சிம்மம்**
புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். முயற்சிகள் கைகூடும். தொழிலில் இலாபம் கிட்டும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருந்த நிலை மாறும்.

**கன்னி**
பணப்பற்றாக்குறையால் கைமாற்று வாங்க வேண்டி வரும். நிம்மதி வரும். அதிகாரிகள் காட்டி வந்த கசப்புகள் நீங்கும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள்.

**துலாம்**
பலகால எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனபலம் அதிகரிக்கும். பெண்களுக்கு சுபநிகழ்ச்சிகள் பற்றிய விருப்பங்கள் கைகூடும். கவலை தீரும். கலைஞர்கள் முயற்சியைக் கூட்டுவீர்கள்.

**விருட்சிகம்**
நிம்மதி நிறையும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வீர்கள். பணியாளர்கள் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் செயல்திறன் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பிறர் திணறுவர்.

**தனுசு**
பணவரவு உண்டு. வியாபாரத்தில் உள்ள போட்டிகளை சமாளிப்பீர்கள். இளைஞர்கள் போராடி வெல்வீர்கள். பேச்சில் கவனம் தேவை. முயற்சிகளில் தடை ஏற்படக்கூடும். தம்பதிகளின் நெருக்கம் கூடும்.

**மகரம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். நட்பு வட்டம் விரியும். எதிர்பார்த்தது நடைபெறாமல் பதற்றம் ஏற்படலாம். பொறுமை தேவை. அதிகாரியின் கட்டளையை விருப்பமின்றி நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
இளைஞர்கள் தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நல்லவர் ஒருவர் அறிமுகமாகி உங்களுக்கு நன்மை செய்வார். நண்பர்கள் உங்களை கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுப்பார்கள்.

**மீனம்**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வேலையாட்களை மாற்றுவீர்கள். வியாபாரிகளுக்கு மகிழ்ச்சியான நாள். குடும்பத்தினர் உதவுவர். உங்களை நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். வாகன வசதி பெருகும்.

# அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து பா.ம.க விலகல் உள்ளூராட்சி தேர்தலில் தனியாக போட்டி!

சென்னை, செப். 16

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகிய பாமக வரும் உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறது.

இதுகுறித்து நேற்று பாமக தலைமை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய ராமதாஸ், "அ.தி.மு.க. கூட்டணி தர்மத்தை மதிக்கவில்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் நம்மால் அ.தி.மு.கவும் பிறகட்சிகளும் பலன் அடைந்தார்களே தவிர, பா.ம.கவுக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை. மேலும்அ.தி.மு.கவில் தலைமைப் பிரச்சினை இருப்பதால் அவர்களால் சரியான முடிவுகளை மேற்கொள்ள முடிவதில்லை" என்று விமர்சனம் செய்திருந்ததாக தகவல்கள் வெளிவந்தன.

இந்நிலையில், சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், "அவர்கள் முடிவு எடுத்துக்கட்டும். அதற்காக எங்கள் கட்சியை விமர்சனம் செய்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. நாங்களும் விமர்சனம் செய்ய நேரிடும். அவர்கள் யாருடைய கட்டாயத்தால் இந்த முடிவு எடுத்தார்கள் என்று தெரியாது. எழுதப்படாத ஒப்பந்தம் சிலருடன் போட்டுக் கொண்டு இந்த முடிவை எடுத்திருக்கலாம்.

தி.மு.கவை பொறுத்தவரை பொய்யான வாக்குறுதியை கொடுத்து வெற்றிபெற்றார்கள். அம்மா காலத்திலும், அம்மா மறைவுக்குப் பின் எடப்பாடி அண்ணன் காலத்திலும் நாங்கள் செய்த திட்டங்களை எடுத்து வைத்து உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்வோம். எங்களிடம் இருந்து விலகியதால் பா.ம.கவுக்குதான் இழப்பு. எங்கள் வாக்குகள் எங்களுக்கு கிடைக்கும்" என்றார்.



# தனித்து போட்டி: தே.மு.தி.க. அறிவிப்பு

சென்னை, செப். 16

தமிழகத்தில் அடுத்த மாதம் நடக்க இருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தே.மு.தி.க தனித்துப் போட்டியிட இருப்பதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் போதிய இடங்கள் கிடைக்காததால் கடைசி நேரத்தில் வெளியேறிய தே.மு.தி.க, டி.டி.வி. தினகரன் தலைமையிலான அ.ம.மு.க



கூட்டணியில் 60 இடங்களில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தது.

இந்நிலையில் நேற்று விஜயகாந்த் வெளியிட்ட அறிவிப்பில், "தமிழகத்தில் நடைபெற இருக்கும் ஒன்பது மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தேமுதிக தனித்துப் போட்டியிடுகிறது. போட்டியிட விரும்புகிற அனைத்து நிர்வாகிகளும் தொண்டர்களும் விருப்ப மனுக்களை ஒக்ரோபர் 16, 17 ஆகிய இரு நாட்களில் அந்தந்த மாவட்டக் கழக தலைமை அலுவலகங்களில் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளாட்சி தேர்தலில் தனித்துபோட்டி பாஜ.க.வின் முடிவு இரு தினங்களில்!

சென்னை, வெப். 16

உள்ளாட்சி தேர்தலில் கூட்டணியா அல்லது தனித்தா? என்பது குறித்து இரு தினங்களில் அறிவிக்கப்படும் என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சட்டப் பேரவை தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் இடம் பெற்ற பா.ம.க, 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் பணிக் குறித்து கட்சி



நிர்வாகிகளுடன் கலந்தாலோசிப்பதற்காக நேற்று தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை நெய்வேலியில் இருந்து கள்ளக்குறிச்சி சென்றார்.

அப்போது அவரிடம் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றிருந்த பா.ம.க, 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறது. அதே அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் பா.ஜ.க. நிலை என்ன என்பது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அண்ணமலை "அது குறித்து கட்சி நிர்வாகி களுடன் ஆலோசித்துவிட்டு இரு தினங்களில் கூட்டணியா அல்லது தனித்தா என்பது பற்றி அறிவிக்கப்படும்" என்று பதிலளித்தார்.

# மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து 'நீட்' தேர்வை இரத்து செய்ய வேண்டும்: ஓ.பி.எஸ்.

சென்னை, செப் 16

"மத்திய அரசுக்கு தேவையான அழுத்தம் கொடுத்து நீட் தேர்வு இரத்து என்ற அறிவிப்பினைச் செய்யவும், 12 ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவப்படிப்பில் மாணவர் சேர்க்கை அமையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

நீட் தேர்வு ரத்து என்பதற்கான சட்டப் போராட்டத்தை அரசு துவக்கிவிட்டதாகவும், கல்வியை



மாநிலப்பட்டியலுக்கு திரும்பக் கொண்டு வர தி.மு.க.வும், அதன் நட்புக்குரிய சமூக நீதி இயக்கங்களும் இறுதி வரை போராடும் என்றும் முதல்-அமைச்சர் அறிவித்து இருப்பதை பார்க்கும் போது, இந்த பிரச்சினைகள் இப்போது முடிவுக்கு வராது என்பது சூசகமாகத் தெளிவுபடுத்தப்பட்டு இருக்கிறது.

மத்திய அரசுக்கு தேவையான அழுத்தம் கொடுத்து நீட் தேர்வு இரத்து என்ற அறிவிப்பினைச் செய்யவும், 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவப்படிப்பில் மாணவர் சேர்க்கை அமையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# சிறைச்சாலைகளில் கைதிகளை பாதுகாப்பது அரசின் கடமையே!

## ஐ.நா. வதிவிட பிரதிநிதி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 16

சிறைக் கைதிகளை தவறாக நடத்துவது கண்டிக்கத்தக்கது என ஐ.நா சபையின் இலங்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

மண்டேலா விதிகளின்படி கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும் என இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி நேற்று தனது ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சிறைச்சாலைகள் ராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் அமர்த்தி அநாகரிகமாக நடந்து கொண்டதுடன், தனது பாதுகாப்புக்காக வைத்திருந்த துப்பாக்கியை இரண்டு அரசியல் கைதிகளது தலை மீது வைத்து அச்சுறுத்தியதாக வெளியாகியுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை அரச தரப்பிலிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சர் தரப்பிலிருந்தோ எந்தக் கருத்துக்களும் வெளியிடப்பட வில்லை.

# நாடு மிகவிரைவில் திறக்கப்பட வாய்ப்பு

## இராணுவ தளபதி கூறுகிறார்



கொழும்பு, செப்.16

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான தற்போதைய முன்னேற்றங்களின் அடிப்படையில் நாடு விரைவில் திறக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

அடுத்த வாரம் நாடு மீண்டும் திறக்கப்பட்டால் விதிக்கப்படவேண்டிய கட்டுப்பாடுகள் குறித்து தெரியப்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொரோனா ஒழிப்புச் செயலணிக்கு அறிவுத்தியுள்ள தாகவும் இராணுவத் தளபதி கூறினார்.

எனவே, அடுத்த வாரத்திலிருந்து புதிய கட்டுப்பாடுகளை விதிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். அத்தோடு புதிய கட்டுப்பாடுகளுடன் நாட்டை திறக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தின்போது இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் டெல்டா திரிபின் பரவல் காரணமாக கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பலமுறை நீடிக்கப்பட்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி அதிகாலை 4.00 மணிவரை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 9 கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் தலைமன்னாரில் நால்வர் கைதாகினர்!

மன்னார், செப். 16

தலைமன்னார் கடற்கரை பகுதியில் வைத்து கடற்படையினரால் நேற்று முன் தினம் நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின்போது சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 9 கிலோ 735 கிராம் 'ஐஸ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 4 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் தலைமன்னார் கடற்பரப்பில் கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்ட போது சந்தேகத்துக்கிடமான மீன்பிடிப் படகொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது மீன் படகில் காணப்பட்ட மீன்பிடி வலைகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 பொதிகளாக பொதியிடப்பட்டிருந்த 'ஐஸ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

தலைமன்னார் பொலிஸாருக்கு கடற்படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தலைமன்னார் பொலிஸார் விரைந்து சென்று குறித்த 'ஐஸ்' போதைப் பொருளை மீட்டதுடன், குறித்த சந்தேக நபர்கள் 4 பேரையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 80 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர். - கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் தற்போது மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்தள விமான நிலையத்தின் பாதுகாப்பு திடீரென அதிகரிப்பு

கொழும்பு, செப். 16

மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்று முற்பகல் பெருமளவான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தங்கல்ல பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அணியொன்றை இந்த பகுதிக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அறியமுடிந்தது.

இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, தீவிரவாத தாக்குதல் ஒன்று நடத்தப்படவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், எனவே இப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவல் உறுதி செய்யப்படவில்லை என்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் அந்த உயர் அதிகாரி மேலும் கூறினார்.

# அனுராதபுரம் சிறை சம்பவம் சித்தார்த்தன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 16

அனுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவமானது கண்டிக்கப்படவேண்டிய விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

சிறைச்சாலைக்கு பொறுப்பான அமைச்சரே ஒரு துப்பாக்கியை சிறைச்சாலைக்குள் எடுத்துச் சென்று அங்கு இருக்கும் தமிழ்க் கைதிகளை மிரட்டுவது என்பது ஒரு மிகப் பாரதூரமான சம்பவமாகும்.

இலங்கையின் சரித்திரத்தில் மிகப் பாரதூரமான சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன. ஏற்கனவே சிறைச்சாலையில் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

இப்படி ஓர் அமைச்சர் நேரடியாகச் சென்று இப்படியான வன்முறைகளில் ஈடுபடுவது என்பது இதுவே முதல் தடவையாகும். மிகக் கண்டிக்கப்படவேண்டிய விடயம். இது சம்பந்தமாக அரசாங்கம் உடனடியாக சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும். நடவடிக்கை எடுக்கத் தவறினால் இது போன்ற நிகழ்வுகள் வருங்காலத்தில் பயங்கரமான செயற்பாடுகளை ஏற்படுத்தி விடும் - என்றார். (அ)

# விபசார விடுதியில் மூவர் கைது!

கொழும்பு, செப். 16

தலங்கமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவத்துகொட பிரதேசத்தில், விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது பெண்கள் இருவர் உட்பட மூவரைத் தலங்கம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

விபசார விடுதியை நடத்தி வந்தவர் மற்றும் விபசார விடுதியை நடத்திச் செல்வதற்கு உதவிய பெண்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டி, சீதுவ மற்றும் தங்கெல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 42, 46, 39 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் சோதனை சாவடிகளில் தடுப்பூசி அட்டைகள் பரிசோதனை

மன்னார், செப். 16

மன்னார் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளில் நேற்று புதன்கிழமை முதல் கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்ட அட்டை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களை உடனடியாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதாரத் துறையினர் கோரிக்கை முன் வைத்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளில் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்டமைக்கான அட்டை பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



முதல் கட்டமாக 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் கொரோனா தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. 30 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களின் முழுமையான விவரங்களை பொது சுகாதார பரிசோதகர்கள் பதிவு செய்துள்ளனர்.

குறிப்பாக மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடி, மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் சந்தியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடி ,வங்காலை - நானாட்டான் பிரதான வீதியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடி உள்ளடங்கலாக பல்வேறு சோதனைச் சாவடிகளில் இராணுவத்தின் உதவியுடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களின் அட்டைகளை பரிசோதித்து வருகின்றனர்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசியை செலுத்தவும்,அல்லது அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மனித உரிமை என்ற போர்வையில் இலங்கைமீது சர்வதேசம் தலையீடு

## சீனா பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16

**இலங்கையின் உள்ளக விடயங்களில் மனித உரிமைகள் என்ற போர்வையில் சர்வதேச நாடுகள் தலையீடு செய்வதற்கு தமது எதிர்ப்பை தெரிவிப்பதாக சீனா அறிவித்துள்ளது.**

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பதில் வழங்கினார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வெளித்தரப்புக்கு இடமளிக்கும் 46/1 பிரேரணையை அரசாங்கம் நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

மனித உரிமைகளை பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்கவும் மேற்கொண்ட முயற்சிக்கு இலங்கையை பாராட்டுவதாக சீனா தெரிவித்துள்ளது.

# ரத்வத்த பதவி விலகுமாறு பிரதமர் மஹிந்த பணிப்பு

## ஜனாதிபதியிடமும் வலியுறுத்து

கொழும்பு, செப். 16

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை உடனடியாக பதவி விலகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலியிலிருந்து பணிப்புரை விடுத்துள்ளார்.

தொலைபேசியூடாக லொஹானை தொடர்பு கொண்ட பிரதமர்இவ்வாறு பணித்துள்ளார்.

அதேபோல் விசாரணைகள் முடியும்வரை லொஹானின் அமைச்சுப் பொறுப்புகள் இடைநிறுத்தப்பட வேண்டுமென பிரதமர் மஹிந்த, ஜனாதிபதி கோட்டாபயவையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அனுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் இராஜாங்க அமைச்சர் அச்சுறுத்தியமை தொடர்பில் பல்வேறு தரப்பில் கண்டனங்கள் வெளியிடப்பட்டு வரும் நிலையில் பிரதமரின் இந்த உத்தரவு வெளியாகியுள்ளது.

# வரலாற்று சிறப்புமிக்க நாகதம்பிரான் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 16

வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று காலை ஆரம்பமாகியது.

பூசைகள் பிரதம குரு கலாதர குருக்கள் தலைமையில் பிரபாகரக் குருக்கள், பிரசாத் சர்மா ஆகியோர் இணைந்து நடத்தினர்.

அலங்கார உற்சவத்தில் வழமையாக 7 ஆம் நாள் கப்பல் திருவிழாவும், எட்டாம் நாள் வேட்டை திருவிழாவும், ஒன்பதாம் நாள் சப்பைரதத் திருவிழாவும், பத்தாம் நாள் சமுத்திர தீர்த்தம் இடம் பெறுவது வழமை.



ஆனால் தற்போதைய சூழலில் கொரோனா பெருந்தொற்றை கட்டுப் படுத்துவதற்காக 10 பேருடன் மட்டும் சுகாதார வழிமுறைகள் பின்பற்றி ஆலய உள் வீதியில் சுவாமி வலம் வருவதற்கான அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என ஆலய பொருளாளர் பத்மநாதன் தெரிவித்தார். (அ-2-3)

# 20 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள் தடுப்பூசி செலுத்தும் வீதம் குறைவு!

கொழும்பு, செப். 16

20 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள் கொவிட் -19 தடுப்பூசிகளைப் பெறும் சதவீதம் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாக சுகாதார அமைச்சு கூறுகிறது.

அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத், எந்த வகையான தடுப்பூசியையும் அதன் வகையையும் பொருட்படுத்தாமல் பெற வேண்டும் என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்பார்த்த எண்ணிக்கையிலான இளைஞர்கள் தடுப்பூசி போடுவதில்லை.

தடுப்பூசிகளால் பாலியல் ஆற்றல் பாதிக்கப்படும் என்பது உலகின் எந்தப் பகுதியிலும் நிரூபிக்கப்படவில்லை.

கொரோனா வைரஸுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்வதே தற்போது மிகவும் பொருத்தமான நடவடிக்கை- என்றார்.

# யாழ்.மாநகரசபை பட்ஜெட் தொடர்பில் அங்கஜன் எம்.பி தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்.மாநகர சபையின் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தின் போது எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வது என்பது தொடர்பாக நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அடுத்த வருடத்துக்கான மாநகரசபை பட்ஜெட்டின்போது எவ்வகையான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அத்துடன் குறிப்பாக பூங்காக்கள், மைதானங்கள், பொதுச் சந்தை கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அங்கஜன்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் மேற்கொண்டதாக கூறப்படும் செயல் உண்மையெனில் அது கண்டிக்கப்படவேண்டியது.

எமது மக்களை கவலைப் படுத்துகின்ற செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலை அருகிலுள்ள குளத்தின் வர்ணங்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதுடன் அதில் மாற்றங்கள் ஏற்படாது- என்றார்.

# க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு 2,922 விண்ணப்பங்கள் மட்டுமே

கொழும்பு, செப். 16

எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு 2,922 விண்ணப்பங்கள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற 6,589 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இரண்டு பரீட்சைகளுக்குமான விண்ணப்ப முடிவுத்திகதி நேற்றாகும். பாடசாலை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அதிபர்கள் மூலம் கல்வி அமைச்சுக்கு அனுப்ப வேண்டும்.

எவ்வாறாயினும், தற்போது சம்பள முரண்பாடுகள் காரணமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள முதன்மைத் தொழி ற்சங்கங்கள் உயர்தர மாணவர்களின் விண்ணப்பங்களை அங்கீகரிக்கப் போவதில்லை என்று சமீபத்தில் தீர்மானித்திருந்தன.

அதன்படி, கல்வியமைச்சில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 46/1 தீர்மானம் குறித்து இலங்கை தொடர்ந்தும் செயல்படவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, செப். 16

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானம் தொடர்பாக ஐக்கிய நாடுகளுடன் இலங்கை தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

46/1 தீர்மானத்தில் நிறுவப்பட்ட அனைத்து வெளியக முன்மொழிவுகளையும் நிராகரிப்பதாக ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து, ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான தொடர்ச்சியான முயற்சிகளின் தேவை குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தத்துக்கு உட்படுத்தப்படவேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துக்காட்டியுள்ளது.

மேலும் சர்வதேச விதிமுறைகள் மற்றும் மனித உரிமை நியமங்களுக்கு ஏற்ப அது அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

# பன்றி இறைச்சிக்காக கான்டஸ்பிளை தாக்கினார் பிரதி பொலிஸ்மா அதிபர்

## 2 வருடங்களின் பின் அவரை கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, செப். 16

நுவரெலியா பொலிஸ் பங்களாவில் பன்றி இறைச்சி மோசடி குறித்து பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கடுமையாக தாக்கினார் எனக் கூறப்படும் சம்பவம் குறித்து பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை கைதுசெய்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் குறித்த பிரதி பொலிஸ்மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகராக பணியாற்றிய போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது குடும்பத்தாருடன் நுவரெலியா பொலிஸ் பங்களாவில் விடுமுறை கழித்துவந்த குறித்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, பங்களாவில் கடமையில் இருந்த கான்ஸ்டபிள் ஒருவரிடம் காட்டுப் பன்றி வேண்டும் என்று கூறியுள்ளார். கான்ஸ்டபிள் உயர் அதிகாரியிடம் பணம் வாங்கிக் கொண்டு சென்று காட்டுப் பன்றியை கொள்வனவு செய்துவந்துள்ளார்.

அதனை சமைத்து சாப்பிட தயாரானபோது, இறைச்சி பகிரப்பட்ட பாத்திரத்தில், இறைச்சி குறைந்திருப்பதாக கூச்சலிட்ட உயர் பொலிஸ் அதிகாரி, கான்ஸ்டபிள் இதனை சாப்பிட்டுவிட்டாரென நினைத்து அவரைத் தாக்கியுள்ளார் என கூறப்படுகிறது.

உயர் அதிகாரியினால் தாக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள், நுவரெலியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் இதுகுறித்து நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

அப்போது பொலிஸ்மா அதிபராக இருந்த பூஜித் ஜயசுந்தர, இதுகுறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார். இதன்போது உயர் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இந்த ஆவணம் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது இது குறித்து ஆராய்ந்துள்ள சட்டமா அதிபர், தற்போது பதவி உயர்வு பெற்று பிரதி பொலிஸ்மா அதிபராக பணியாற்றும் குறித்த உயர் பொலிஸ் அதிகாரியை கைதுசெய்யுமாறு கடந்த 10ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# மத்திய வங்கி ஆளுநராக ஜனாதிபதிதான் காரணம்

## மனம் திறந்தார் கப்ரால்

கொழும்பு, செப். 16

மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்பை என்னிடம் ஒப்படைக்கவேண்டாம் என்று பல முறை ஜனாதிபதியிடம் கூறிய தாகவும், இருப்பினும் அவர் தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக இப்போது மகிழ்வுடன் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகவும் மத்திய வங்கியின் புதிய ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.



நேற்று பதவியேற்று அவர் நிகழ்த்திய ஆரம்ப உரையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார ரீதியாக பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், நீண்டகால அடிப்படையில் சாதக மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய கடினமான கொள்கைகளையும் தீர்மானங்களையும் வகுக்கவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் வீணடிக்கப்படாத வகையில், பொருளாதார உறுதிப்பாட்டை அடைந்துகொள்வதை நோக்கி மத்திய வங்கியை வழிநடத்துவோம்-என்றார்.

# 53 ஆயிரம் பட்டதாரிகளுக்கு 3 மாதங்களில் வேலைவாய்ப்பு

கொழும்பு, செப். 16

பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் தமக்கு வழங்கப்படும் 20,000 ரூபாய் கொடுப்பனவில் ஏதேனும் பிரச்னை இருக்குமாயின் அதனை உரிய பகுதியினரின் கவனத்துக்கு கொண்டுவருமாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 53,000 பட்டதாரிகள் எதிர்வரும் மூன்று மாதங்களில் அரச நிறுவனங்களுக்கு இணைக்கப்பட உள்ளார்கள்.

இந்தப் பட்டதாரிகளுக்கு விரைவில் தொழில் வழங்குவதற்கான பொறுப்பை ஜனாதிபதி கோட்டாபய சில அமைச்சர்களுக்கு வழங்கியுள்ளார்.

இவர்களுக்கு தற்சமயம் வழங்கப்படும் 20,000 ரூபாய் கொடுப்பனவில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் அதுபற்றி கண்டறிந்து உரியவர்களுக்கு நிலுவை தொகையும் வழங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இது பற்றி கருத்து வெளியிட்டார்.

அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் உயர்ந்த பட்ச அளவில் குறைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பது மிக முக்கியமானதாகும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

# 7,534 சிறுவர்களுக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, செப். 16

நாடளாவிய ரீதியாக 2 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 7,534 சிறுவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த அனைவரும் தற்போது வீடுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, 240 கர்ப்பவதி பெண்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன், அவர்கள் அனைவரும் தற்போது வீடுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# 1164 கிலோ உலர்ந்த மஞ்சளுடன் அடம்பனில் ஒருவர் கைதானார்!

மன்னார், செப். 16

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அடம்பன் பொலிஸ் பிரிவில் உள்ள வீடு ஒன்றில்,சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒருதொகை உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை அடம்பன் பொலிஸார் நேற்று புதன்கிழமை அதிகாலை மீட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், விரைந்து செயல்பட்ட அடம்பன் பொலிஸார் நேற்று புதன்கிழமை அதிகாலை குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றை சோதனையிட்டனர்.

இதன்போது அந்த வீட்டில் பதுக்கி வைத்திருந்த 1164 கிலோ உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை மீட்டனர்.மேலும் குறித்த வீட்டின் உரிமையாளரையும் அடம்பன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட நபரை அடம்பன் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## சுட்டிக்காட்டுகிறார் சிறிதரன் எம்.பி



**கொழும்பு, செப்.16**

**இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையின் மிலேச்சத்தனமான செயல்பாடு இந்த நாட்டின் சட்டத்தையும் நீதியையும் கேள்விக்குட்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2021.09.12 ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலைக்குள், தனது நண்பர்களுடன் மதுபோதையில் நுழைந்த, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அனுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட்டு அமரச் செய்ததோடு, சுட்டுக் கொல்வேன் என கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டிய செயற்பாடு, இந்த அரசாங்கத்தின் எதேச்சதிகாரத்தனத்தை வெளிச்சம்போட்டுக் காட்டும் செயலாகவே அமைந்துள்ளது.

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர், கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு ஹெலிகொப்டரில் பயணித்து, தனது நண்பர் குழாமுடன் சிறைச்சாலைக்குள் நுழைந்ததோடு, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை மிலேச்சத்தனமாக, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும். இச் செயல்பாடானது, இந்த நாட்டின் சட்டம், நீதி, இன நல்லிணக்கம் என்பவற்றை கேள்விக்குட்படுத்துவதோடு, கடந்தகாலங்களில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் அப்பாவித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன அழிப்புச் சம்பவங்களை மீள நினைவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது.

1983 ஆம் ஆண்டு கொழும்பின் உயர் பாதுகாப்புச் சிறைச்சாலையான வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து 53 தமிழ் அரசியல் கைதிகள், சக சிங்களக் கைதிகளால் குத்தியும், வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 2000.10.25 ஆம் திகதியன்று மத்திய மாகாணத்தின் பிந்துனுவெவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 27 தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் காடையர் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்டனர். 2012.07.04 ஆம் திகதி வவுனியா சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளான நிமலரூபன், டில்றுக்சன் ஆகிய இரு தமிழ் அரசியல் கைதிகளும் சிறைச்சாலைப் பொலிஸாராலும், இராவத்தினராலும் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறான சிறைச்சாலைப் படுகொலைகள் அனைத்தும் தமிழ் அரசியல் கைதிகளை இலக்குவைத்து தொடர்ச்சியாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டு வந்த நிலையில், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளிடம் மிக மோசமான அதிகாரத் தொனியோடு, இனவாதத்தைக் கக்கும் வகையில் நடந்து கொண்டுள்ளமை, தமிழ் அரசியற் கைதிகளின் பாதுகாப்புக் குறித்த அச்சத்தை அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் ஏற்படுத்தியுள்ளது.

சிங்களவர்களுடனான நல்லிணக்கத்தை வளர்க்கும் செயல்பாடுகளில் தமிழர் தரப்பு இதயசுத்தியோடு ஈடுபட வேண்டுமென வலியுறுத்தி வரும் சர்வதேசம், நல்லிணக்கத்தை அடியோடு ஆட்டம் காணவைக்கும் இத்தகைய இனவன்முறைகள் குறித்தும் தனது கவனத்தைத் திருப்ப வேண்டும் என இந்தச் சந்தர்ப்பதில் நான் கோரிக்கை விடுக்கிறேன். இந்த நாட்டின் ஜனாதிபதி நீதித்துறையின் சுயாதீனத்தைப் பேணவேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருந்தால் இச்சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட அமைச்சரை பதவியிலிருந்து நீக்கி, முறையான நீதியை நிலைநாட்ட வேண்டுமென வலியுறுத்துகிறேன்-என்றார்.

# விமான நிலையத்தில் 3 மணி நேரத்துக்குள் பி.சி.ஆர். பெறுபேறு

கொழும்பு, செப். 16

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். ஆய்வகம் ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி திறக்கப்படவுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இந்தப் புதிய பி.சி.ஆர். ஆய்வகமானது நாளாந்தம் 7 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகளை முன்னெடுக்கவுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதன் மூலம் நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பி.சி.ஆர். சோதனை அறிக்கையானது மூன்று மணி நேரத்துக்குள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பல பகுதிகளில் கறுப்பு பூஞ்சையுடன் கொரோனா நோயாளிகள் அடையாளம்

கொழும்பு, செப். 16

கொரோனா தொற்றாளர்களில் கறுப்பு பூஞ்சை நோய் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது, கொழும்பு தேசிய வைத்தியசாலை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட பல இடங்களில் கறுப்பு பூஞ்சை நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

உடலின் நோய் எதிர்ப்பு சக்தி இறுதியில் பலவீனமடையும் போது மட்டுமே இந்த நோய் ஏற்படும். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, தொற்று அல்லாத நோய்கள் உள்ளவர்களுக்கு இது உருவாக வாய்ப்புள்ளது.

இது தோல், மூக்கு, மூளை, நுரையீரல், கண்கள் அல்லது உடலின் வேறு எந்த மேற்பரப்பிலும் உருவாகலாம். இங்குள்ள முதன்மை கிருமி ஒரு பூஞ்சை. அது சூழலில் உள்ளது. நோயாளிகள் வந்து போகும் போது யாருக்கும் இந்த நோய் பரவாது.

2019 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் கறுப்பு பூஞ்சை நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். இருப்பினும், கோவிட் -19 நோயாளிகள் கருப்பு பூஞ்சையால் பாதிக்கப்படுவது இதுவே முதல் முறை - என்றார்.

# ஆணையாளர் பச்லெட் அறிக்கையில் நிரம்பிவழியும் இரட்டைத்தன்மை

ஈழத்தமிழர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அது பற்றிய விபரங்கள் எதனையும் குறிப்பெடுக்காமல் (note), பொறுப்புக்கூறல் தொடர்பாக ஐ.நாவுடன் இணைந்து நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்வோமெனக் கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி கோட்டாபய வழங்கிய உறுதிமொழியைக் குறிப்பெடுப்பதாக ஜெனிவா மனித உரிமைச் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்சலெற் கூறியுள்ளார்.

அதேவேளை இலங்கை அரசாங்கம் தமக்குத் தந்திருக்கும் தகவல்களை ஏற்றுக்கொள்ளும் மன நிலையோடு, அதாவது அரசின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தந்திருக்கும் தக்வல்களை ஆமோதிப்பதாக (acknowledge) பச்லேட் அம்மையார் இரட்டை நிலையெடுத்துத் தனது வாய்மூல அறிக்கையில் கூறியுள்ளார்.

அதாவது தமிழர் பிரதேசங்களில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற காணி அபகரிப்புகள், பௌத்தமயமாக்கல், மரபுரிமைப் பண்பாட்டு அழிப்புப் போன்ற இன அழிப்புக் குறித்த எதனையுமே ஆணையாளர் குறிப்பெடுக்கக் (note) கூடத் தவறியுள்ளார். மாறாக, ஜூன் மாதத்தில் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழியையும் கோட்டபாய சொன்ன "அர்ப்பணிப்பு" பற்றியும் குறிப்பெடுத்திருக்கிறார்.

திங்கட்கிழமை ஜெனிவா மனித உரிமைச் சபையின் அமர்வு ஆரம்பமாகியது. இதன்போது ஆணையாளர் வெளியிட்டுள்ள வாய்மொழிமூல அறிக்கையிலேயே இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது நம்பிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பையும் அதன் நீதித்துறையையும் ஏற்றுக்கொள்ளும் தோரணையில் இலங்கை அரசாங்கம் கூறிய உள்ளகப் பொறிமுறையை ஆமோதித்துக்கொள்ளும் தொனியில் பச்லெட் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சில வாரங்களுக்கு முன்னர் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்தாரெனவும் அது பற்றியும் தான் குறிப்பெடுத்திருப்பதாகக் கூறியிருக்கும் அவர், இராணுவ மயமாக்கலினால் ஏற்படும் சிவில் சமூகச் செயல்பாடுகளின் பாதிப்புக்கள், சமூகப் பொருளாதார ஆட்சி பற்றிய சவால்களுக்கு மத்தியில் மேலும் சிக்கலடைந்திருப்பதை அவதானிப்பதாகக் கூறுகிறார்.

இலங்கையில் நீதி நிர்வாகம், ஆட்சித் தன்மை ஆகியவை நடைமுறையில் சீரழிந்தே சென்றுகொண்டிருப்பதையும் அவர் தனது வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்டி, ஆழ்ந்த அவதானிப்பு, அக்கறை மற்றும் சந்தேகங்களையும் எழுப்பியிருக்கிறார்.

இது இவ்வாறிருக்க, கடந்த மார்ச் ஏப்பிரலில் கொண்டுவரப்பட்ட 46/1 தீர்மானம் செயற்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஆணையாளர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் ஈழத்தமிழர்களுக்கான நிரந்த அரசியல் தீர்வு பற்றி எந்தவொரு பரிந்துரைகளையும் ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தவேயில்லை.

அதேவேளை, கண்காணிப்பு, நீதித்துறைச் சீரழிவு, துன்புறுத்தல், மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் காணாமல் போனவர்களின் உறவுகள் அச்சுறுத்தலுக்குள்ளாவது என்ற வழமையான சிக்கல் தொடர்ந்தும் நீடிக்கும் நிலைக்கு அப் பால், அது தற்போது அரசாங்கத்தை

**அ.நிக்ஸன்**

விமர்சிக்கும் மாணவர்கள், கல்விமான்கள், மதத்தலைவர்களை நோக்கியும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் செயற்படும் சிவில் அமைப்புகளைக் கட்டுப்படுத்த புதிய விதிகள் தயாரிக்கப்படுகின்றன. அந்த விதிகள் தற்போதுள்ள கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமடையச் செய்யும் அச்சம் நிலவுகிறது என்பதை அவதானிக்கும் ஆணையாளர், வடக்கு - கிழக்கில் தமிழர் தரப்புகள் வெளியிட்டுவரும் அச்சங்களையும் அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளையும் தான் குறிப்பெடுத்துக் கொள்வதாகக்கூடச் சொல்லத் தவறிவிடுகிறார்.

ஆனால், அரசாங்கம் சிவில் அமைப்புகளைக் கட்டுப்படுத்த முயலும் அந்தப் புதிய விதிகள் பற்றிய வரைபை வெளிப்படுத்தி அது பற்றிப் பகிரங்கமாகப் பேச விவாதம் உருவாக இடமளிக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் வழக்கின் பிரதான எதிரியான வசந்த கரன்னகொட விடுதலை செய்யப்பட்டமை, மற்றும் துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் நேரடித் தலையீடு தொடர்பான தனது கவலையை ஆணையாளர் வெளிப்படுத்துகிறார்.

மனித உரிமைச் சபையின் தீர்மானத்துக்கு அமைவாக ஆறாவது அலுவலகமாகக் கிளிநொச்சியில் கடந்த மாதம் திறக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் அலுவலகம் பற்றியும் ஆணையாளர் பாராட்டுகிறார். அதேவேளை, இந்த அலுவலகப் பொறி முறை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமெனவும் சொல்கிறார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் அதேவேளை அவர்களுக்கு நீதியையும் அரசாங்கம் வழங்க முன்வரவேண்டும் எனவும் கூறுகிறார். பயங் கரவாதத் தடைச் சட்டத் திற்கு மாற்றீடான சட்ட மூல உருவாக்கத்தின் அவசியம் பற்றியும் கூறுகிறார். அதேவேளை, ஜனாதிபதி நியமித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் வெளிவருமெனத் தான் எதிர்பார்ப்பதாகவும் சொல்லியிருக்கிறார்.

அதாவது, நேரடியாக இல்லாது விடினும், இலங்கை அரசாங்கத்தின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஆணையாளர் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்றே நாம் இதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, ஏற்கனவே ஐ.நா. வின் வேறுபட்ட இடங்களில் இருந்த ஆயிரத்து நூற்றி இருபத்தியொரு ஆதாரங்களை ஒரிடத்தில் ஒன்றுபடுத்தியிருப்பதாகவும் மேலும் புதிய ஆதாரங்களை இந்தவருடம், அதாவது இனிமேற்தான் 46/1 தீர்மானத்துக்கு உட்பட்டு, தேட விருப்பதாகவும் ஆணையாளர் கூறுகிறார். இந்தச் செயல்பாடுகளுக்குரிய நிதிகளையும் உறுப்பு நாடுகளிடம் ஆணையாளர் கோருகின்றார்.


ஆக, இலங்கை அரசு மீது ஜெனிவா கடந்தமுறை கொடுத்த அழுத்தத்துக்கு கணிசமாக அது உட்பட்டு இணங்கி வந்திருப்பதாகவும், அது உள்ளகப் பொறிமுறையை மேலும் சீரமைத்து, தானே ஒத்துக்கொண்டுள்ள விடயங்களைச் செய்தாற்போதும் என்பது போலவும் ஆணையாளரின் அணுகு முறை அமைந்துள்ளது.

அதாவது இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் ஆட்சி முறைக்காகவே தமிழ் இன அழிப்பு இடம்பெற்றது. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்குவதாகக் கூறிக் கொண்டு மனித உரிமைச் சபையில் தீர்மானம் நிறைவேற்றிய வல்லாதிக்க நாடுகள், இலங்கை ஒற்றையாட்சியை நல்வழிப்படுத்தும் பொறிமுறைகளையே தமது பரிந்துரைகளில் முன்மொழிந்து வருகின்றன. அதனையே ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கையும் எடுத்தியம்புகின்றது.



> **"இலங்கை அரசு மீது ஜெனிவா கடந்தமுறை கொடுத்த அழுத்தத்துக்கு கணிசமாக அது உட்பட்டு இணங்கிவந்திருப்பதாகவும், அது உள்ளகப் பொறிமுறையை மேலும் சீரமைத்து, தானே ஒத்துக் கொண்டுள்ள விடயங்களைச் செய்தாற்போதும் என்பதுபோலவும் ஆணையாளரின் அணுகுமுறை அமைந்துள்ளது.**





# தமிழக அரசியலுக்கு புதிய பாதையை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா

## செப்ரெம்பர் 15 அவரது பிறந்த நாள்




ஆழி செந்தில்நாதன்

இந்திய அரசியலுக்கு தமிழ்நாடு அளித்திருக்கும் கொடைகள் என்று மூன்று விஷயங்களைச் சொல்லலாம். 1.சமூகநீதி 2.மாநில சுயாட்சி 3.பொதுநலப் பொருளாதாரம். தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த வரலாற்றுத் தொடர்ச்சியாலும் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தாலும் உருவான ஓர் அரசியல் கருத்தாக்கம் தான் இந்த மூன்றையும் ஒருசேர உருவாக்கியது. இந்தக் கோட்பாடுகளுக்கு அரசியல் அதிகார உருவத்தை அளித்து, இவற்றை ஜனநாயக ஆயுதங்களாக மாற்றியவர் அறிஞர் அண்ணா.

சுதந்திரம் அடைந்தபோது இந்தியா எத்தகைய அரசியல் பாதையை முன்னெடுக்கும் என்பதில் யாருக்கும் ஆச்சரியம் இருந்திருக்கவில்லை. ஜவாஹர்லால் நேருவும் அண்ணல் அம்பேத்கரும் பிறரும் ஓர் அரசமைப்புச் சட்டரீதியிலான குடியரசு முறையைத்தான் கொண்டுவர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். மக்களின் போராட்டங்களின் எதிர்வினையாக பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்த மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள், மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள், 1935 இந்திய அரசுச் சட்டம் போன்றவை மூலமாக இந்தியாவில் மக்களாட்சி மலரப்போகிறது என்பது முன்கூட்டியே தெரிந்துவிட்டது.

காலனிய நாடுகளில் எல்லாம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு சுதந்திர ஆட்சிகள் உருவானபோது, பல நாடுகளில் அரைகுறை ஜனநாயகமும் ராணுவ ஆட்சிகளும் ஒற்றைக்கட்சி ஆட்சிகளும் உருவாயின. ஆனால், இந்தியாவில் ஜனநாயக ஆட்சி முறை உருவானது. சுதந்திர விடுதலைப் போராட்டக் காலத்திலேயே அரசியல் பன்மைத்துவம் ஓங்கியிருந்த காரணத்தால் இங்கே பல கட்சி ஆட்சிமுறை இயல்பாகவே கைகூடியது.

இந்தப் பின்னணியில்தான் தமிழ்நாட்டு அரசியலின் திசைவழியைப் பார்க்க வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ்நாட்டில் உருவான பிராமணரல்லாதோர் இயக்கமும் சுயமரியாதை இயக்கமும் பிறகு நீதிக்கட்சியும் திராவிடர் கழகமும் ஏற்கெனவே இந்த அரசியல் மாற்றச் சூழலில்தான் வளர்ந்திருந்தன. எனவே, 1947-க்குப் பிறகு அதைத் தொடர வேண்டிய தேவையும் இருந்தது.

அந்தத் தேவையை 1947-க்குப் பிந்தைய அரசியல் சூழலுக்கேற்ப வகுத்தளித்தவர்தான் அண்ணா. அதன் முதல் முயற்சிதான் 1949 இல் திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர் உருவாக்கியது. அதை, தந்தைக்கும் மகனுக்குமான பிரிவாகப் பார்ப்பது பிழை. அதைக் காலனிய காலத்துக்கு முற்பட்ட சூழலுக்கும் பின்வந்த சூழலுக்கும் இடையிலான வித்தியாசமாக, ஒரு மாற்றமாகப் பார்ப்பதுதான் முறை.

சாதியச் சமூகத்தில் நவீன முன்னேற்றம் சாத்தியமில்லை என்று அம்பேத்கரும் பெரியாரும் காட்டிய வழிதான் அண்ணாவின் வழி. ஆனால், அந்தச் சமூகநீதியை உறுதிப்படுத்துவதற்கான அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதில் அண்ணாவுக்கென்று ஒரு தனித் திட்டம் இருந்தது. அதுதான் முதலில் தமிழ்நாட்டின் சமூகநீதிப் பாதையையும் இன்று அனைத்திந்திய அளவிலான சமூகநீதிப் பாதையையும் உருவாக்குவதில் பெரும்பங்காற்றியது. அண்மையில், மருத்துவ மேற்படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீட்டை உறுதிசெய்ததில் இன்றைய திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிகூட, அன்றைய திமுக தலைவர் உருவாக்கிய அரசியல் பாதையில்தான் இருக்கிறது. அந்த வெற்றி தமிழ்நாட்டவர்களுக்கு மட்டுமேதானா என்ன? பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமேதானா என்ன?

அண்ணா தொடக்கத்தில் தனிநாடு கேட்டார். பிறகு, மாநில சுயாட்சி முழக்கத்தை முன்வைத்தார். இரண்டுக்குமே அடிப்படையாக அவர் முன்வைத்த அரசியல் பிளவுவாத அரசியல் அல்ல. இனவெறுப்போ ரத்தக்களரியோ அல்ல. இந்தியாவை ஜனநாயகபூர்வமாக ஆள்வதற்கான கூட்டாட்சி சூத்திரத்தை அவர் முன்வைத்தார். அவர் காலத்தின் வேறெந்தத் தலைவர்களைவிட அண்ணாவின் பங்கு இதில் பெரியது. அன்று அவரது முயற்சி பேசப்படாமல் இருந்திருக்கலாம் புறக்கணிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், காலத்தின் கட்டளை வேறொன்றாக இருக்கிறது. இன்று மோடியின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்களிலிருந்தும் - அதாவது எதிர்க்கட்சிகள் ஆள்கிற மாநிலங்களிலிருந்தும் - மாநில சுயாட்சிக் கோரிக்கை வெளிப்படுகிறது. பல சமயங்களில், பல தலைவர்கள் இவற்றைப் பற்றிப் பேசியிருக்கலாம். ஆனால், கூட்டாட்சிக்கும் சுயாட்சிக்குமான அரசியல் அடிப்படையை அண்ணாவைப் போல தீர்மானகரமாக முன்வைத்தவர் வேறு ஒருவரில்லை.

மூன்றாவது கொடையான பொது நலப் பொருளாதாரம் என்பதைப் பற்றிப் பார்ப்போம். ஈரோட்டு சமதர்மத் திட்டத்தின் வாயிலாக ஏற்கெனவே ஒரு பொதுவுடைமை சிந்தனை வட்டத்தில் இருந்தவர்தான் அண்ணா. மிட்டாமிராசுகளின் கட்சியாக இருந்த நீதிக்கட்சியை மக்கள் கட்சியாக மாற்றியதில் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இருந்த வியூகம் பற்றி நாம் அறிவோம். எல்லோரும் அறியாத ஒன்று என்னவென்றால், அண்ணா மிகத் தீவிர மான சோஷலிச மனப்பான்மையர் என்பதுதான். திராவிடர் கழகம் என்கிற பெயரிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் எனத் தன் கட்சிக்குப் பெயர் வைத்தபோது, முன்னேற்றம் என்ற சொல்லை எந்த அர்த்தத்தில் அண்ணா சேர்த்தார்? வளர்ச்சி என்ற பொருளில் அல்ல, முற்போக்கு என்ற பொருளில் தான் முன்னேற்றம் என்ற சொல் சேர்க்கப்பட்டது. தி.மு.கவை ஆங்கிலத்தில் தொடக்க காலத்தில் 'Dravidian Progressive Federation' (DPF) என்றுதான் அழைத்தார்கள். பிறகுதான் அது 'DMK' ஆனது.

அண்ணா ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. ஆனால், மிகத் தெளிவாகவே சோஷலிசப் பொருளாதாரத்துக்கு ஆதரவாக இருந்தவர். அதே சமயம் இந்தியாவின்/தமிழ்நாட்டின் சூழலின் இயக்கப் போக்கை அறிந்தவர். உலக அளவில் சோஷலிசத்துக்கும் இந்திய அளவில் நேருவின் சோஷலிசத் திட்டமிடல் பாதைக்கும் அவர் ஆதரவாக இருந்தார். சொல்லப்போனால், அது போனதுமான அளவுக்கு சோஷலிசத் தன்மை வாய்ந்ததாக இல்லை என்றும் விமர்சித்தார், அத்துடன் இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் மீதும் நேருவின் மீதும் அவர் வைத்த குற்றச்சாட்டுகள் முற்றிலும் வேறு தளத்திலானது.

பிற்காலத்தில் கழக ஆட்சிகளின் போது - குறிப்பாக கலைஞர் முதல் இன்று ஸ்டாலின் வரை தி.மு.க. அரசுகளின்போது - பின்பற்றப்படும் அனைத்து சமூகப் பொருளாதாரக் கோட்பாடுகளுக்கும் அண்ணா போட்டிருந்த வலுவான சித்தாந்த அடித்தளமே காரணமாக இருந்தது. அதுதான் இன்று 'தமிழ்நாடு மாதிரி' என்று பேசப்படுவதற்கு முதல் காரணமாக இருந்தது. இந்த மூன்று அம்சங்களும் இன்று இந்திய அளவில் பேசப்படுகின்றன. அண்ணாவின் சிறப்பு இந்த மூன்று அம்சங்கள் மட்டும் அல்ல. இந்த மூன்றையும் ஒரே வடிவத்தில் அவர் வடித்துக்கொடுத்ததுதான். அதற்கான சிக்கலான வியூகத்தையும் அவர் வகுத்து, நடைமுறைப்படுத்தி, வெற்றியும் பெற்றார்.

அண்ணா சொல்வது என்ன? சமூகநீதி நிலவ வேண்டும் என்றால், சமூக அநீதிக்கு எதிராகப் போராட வேண்டும், போராட்டத்தின் விளைவாக அரசியல் அதிகாரத்தையும் வென்றெடுக்க வேண்டும். ஒரு ஜனநாயக அரசியலில் அது தேர்தலின் மூலமாகவே நடக்கிறது. எனவே, தேர்தலில் பங்கேற்று ஆட்சி அமைக்க வேண்டும், அந்த ஆட்சி மக்களின் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை மீட்டளிப்பதாக இருக்க வேண்டும். மக்களுக்கான உரிமைகளை மீட்டளிக்க அந்த அரசுக்கு முதலில் உரிமை இருக்க வேண்டும். அந்த உரிமை டெல்லியில் சிறைபட்டிருக்கிறது.

எனவே, அதை மீட்க வேண்டும். சுயாட்சி இல்லாமல் சுதந்திரமான சமூகத்தை உருவாக்க முடியாது. சமூக நீதி என்பது வெறும் பிரதிநிதித்துவம் அல்ல, மக்களின் நல்வாழ்வு. நல்வாழ்வுக்கு வழி வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல். அதற்குப் பொருளாதாரம் முக்கியம். எனவே, அரசின் பொருளாதாரக் கொள்கை மக்கள் நலப் பொருளாதாரமாக இருக்க வேண்டும். பலமான பொதுத்துறைக் கட்டமைப்பும் கூட்டுத் திட்டமிடலும் வேண்டும். சுதந்திரமான முறையில் தொழில்முனைவோர் வளரவும் வேண்டும். ஆனால், தொழிலும் நிதியும் சில பனியாக்களிடம் சிக்கிக்கொள்ளக் கூடாது. அதிகாரம் டில்லியில் மாட்டிக் கொள்ளக் கூடாது. நாம் யாரிடமும் கையேந்தி நிற்கக் கூடாது. எதிர்காலம் எதேச்சாதிகாரிகளிடம் சிக்கிக் கொள்ளக் கூடாது - இதுதான் அண்ணாவின் மனத் தோட்டம். இதுதான் இன்று மீண்டும் பேசப்பட வேண்டிய அரசியல் சித்தாந்தம். ■

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் கணக்கீடு - I

ஆசிரியர் : கே.பாலகஜன்
நேரம் : 2 மணித்தியாலங்கள்

இ- **ஆதனம்** பொறி மற்றும் உபகரணங்களினை **சந்தைப் பெறுமதியில்** மதிப்பிடுதல் ……………………………….

ஈ- குறித்த காலப்பகுதியில் ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான அசைவினை குறிப்பில் வெளிக்காட்டுதல் ……………………………….

**37)** **அருட்செல்வி PLC** வியாபாரம் **பெறுமதி சேர்வரிக்காகப்** பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். **பெறுமதி சேர் வரி வீதம்** (VAT) 8% ஆகும். சகல **விற்பனைகளும், கொள்வனவுகளும் கடனிற்கே மேற்கொள்ளப்பட்டது. VAT கட்டுப்பாட்டுக்கணக்கு 31.03.2021 இல் முடிவடையும் காலப்பகுதிக்கு பின்வருமாறு காணப்பட்டது.**

VAT கட்டுப்பாட்டுக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | மீதி வந்தது | 50000 |
| வியாபாரச் சென்மதி | 48000 | வியாபார வருமதி | 80000 |
| காசு | 52000 | | |
| மீதி சென்றது | 30000 | | |
| | 130000 | | 130000 |
| | | மீதி வந்தது | 30000 |

**பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.**

31.03.2021 முடிவடையும் காலப்பகுதியில் **இலாபம்/நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றில்** காட்டப்படும் பின்வருவனவற்றின் **பெறுமதியினைக் குறிப்பிடுக.**

அ) விற்பனைகள் ……………………………

ஆ) கொள்வனவுகள் ……………………………

- **38,39 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

**பிரியங்கா, கீர்த்தனா** என்போர் பங்குடமையொன்றின் பங்காளர்கள் ஆவார். இவர்களின் இலாபநட்ட விகிதங்கள் 3:2 ஆகும். **01.04.2020** இல் பங்குடமையில் **அபிதா** என்போர் இணைந்து கொண்டார். இத்தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா.2000000 என **மதிப்பீடு செய்யப்பட்டது.** புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கினைத் திறவாது **மூலதனக்கணக்கின் ஊடாக மேற்கொள்வது** எனத்தீர்மானிக்கப்பட்டது. **புதிய இலாபநட்ட விகிதம் 5:3:2 எனப் பகிர்வு செய்யப்படும்.**

31.03.2021 இல் முடிவடைந்த **காலப்பகுதிக்கான** பங்காளர்களின் **நடைமுறைக்கணக்கில் பதியப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு:**

| விபரம் | **பிரியங்கா** (ரூபா 000) | **கீர்த்தனா** (ரூபா000) | **அபிதா** (ரூபா000) |
|---|---|---|---|
| இலாபப்பங்கு | 1000 | 600 | 400 |
| சம்பளங்கள் | 800 | 800 | 800 |
| மூலதன வட்டி (10%) | 600 | 400 | 200 |
| பற்றுக்கள் | (80) | (100) | (40) |
| செலுத்திய சம்பளம் | (800) | (800) | (800) |

**38)** **பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.**

அ) **01.04.2020** இல் அபிதாவினால் மூலதனமாகக் கொண்டு வந்த காசு: ரூபா ………………………

ஆ) **01.04.2020** இல் காணப்பட்ட பங்குடமையின் உரிமையாண்மை ரூபா.2000000 எனின், **31.03.2021** பங்குடமையின் உரிமையாண்மை: ரூபா……………………………

**39)** **பின்வருவனவற்றைக் கணிக்குக.**

அ) **31.03.2021** இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான **பங்குடமையின் இலாபம்:** ரூபா……………………

ஆ) **பங்காளருக்கிடையில் பகிரப்பட்ட மொத்த இலாபப்பங்கு/மொத்தவருமானம்:**
பிரியங்கா ரூபா: ………………… கீர்த்தனா ரூபா: …………………

**40)** **நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு** சட்டகத்தின் படி **நிதிக்கூற்றுக்களில்** உள்ளடக்கப்படும் மூலங்களினை அளவிடுவதற்குப் பயன்படும் **அளவீட்டு அடிப்படைகள்/முறைகள்** யாவை?

1. ……………………………………………
2. ……………………………………………
3. ……………………………………………
4. ……………………………………………

**41)** பின்வரும் தகவல்கள் **டிலான் PLC** வணிகத்தின் **சொத்துக்கள் தொடர்பானவையாகும்.**

| **சொத்தின் வகை** | **கிரயம்** (ரூபா000) | **பயன்தரு ஆயுட்காலம்** (வருடங்கள்) | **எஞ்சிய பெறுமதி** (ரூபா000) | 01.04.2020 இல் **திரண்ட தேய்வு** (ரூபா000) |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 8000 | 10 | 800 | 3600 |
| இயந்திரம் | 4000 | 5 | 400 | 1440 |

**மேலதிக தகவல்கள்:**

- **2020.04.01** இல் மோட்டார்வாகனத்தின் பெறுமதியினை அதிகரிப்பதற்கான ரூபா.1200000 செலவழிக்கப்பட்டது. இதன் காரணமாக மோட்டார் வாகனத்தின் **எஞ்சிய பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்களாக** மதிப்பிடப்பட்டது. எஞ்சிய பெறுமதியில் மாற்றமில்லை.
- **2021.03.31** இல் நிறுவனத்தின் இயந்திரமானது ரூபா.3000000 இற்கு **அகற்றல் செய்யப்பட்டது.**

**பின்வருவனவற்றினைக் கணிப்பிடுக.**

அ) **2021.03.31** இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான **மோட்டார் வாகனத்தின் பெறுமானத்தேய்வு ரூபா**……………………………

ஆ) வணிகத்தின் இயந்திரத்தினை **அகற்றியதனால் ஏற்பட்ட இலாபம்/நட்டம்** ரூபா……………………………

# வவுனியாவில் அடங்க மறுக்கும் கொரோனா; மீண்டும் ஒரேநாளில் 11 பேர் பரிதாப மரணம்

வவுனியா, செப். 16

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது. 104 வயது மூதாட்டி உட்பட 11 பேர் ஒரே நாளில் உயிரிழந்தனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 11 பேர் நேற்றுமுன்தினம் மரணமடைந்தனர்.

இந்நிலையில், மரணித்த 11 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வவுனியா, மூனாமடு கிராமத்தைச் சேர்ந்த குறித்த 104 வயது கதிரவேல் அமிர்தம் என்ற மூதாட்டியே மரணமடைந்தவராவார்.

வவுனியாவில் அதிகூடிய வயதில் மரணித்த முதலாவது வயோதிபராக இவரே கணிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ)



# சிவப்பு அபாய வலயத்திலிருந்து இலங்கை இன்னும் மீளவில்லை




## மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 15

**“இலங்கையானது கொரோனா வைரஸ் தாக்கத்தின் சிவப்பு எச்சரிக்கை வலயத்திலேயே இன்னும் இருக்கின்றது. எனவே, மற்றுமோர் அலை உருவாவதை தடுப்பதற்கு அனைத்துவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.”**

- இவ்வாறு இலங்கை மருத்துவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“நாடு என்ற வகையில் நாம் இன்னமும் எச்சரிக்கை மட்டத்திலிருந்து மீளவில்லை. நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். நாளாந்தம் சராசரி 150 மரணங்களும் பதிவாகின்றன. எனவே, அவதான மட்டத்திலிருந்து மீண்டுவிட்டோம் என்பதற்கான சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. சிவப்பு எச்சரிக்கை வலயத்திலேயே நாடு இன்னமும் இருக்கின்றது.

எனவே, அரசும், நாட்டு மக்களும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மற்றுமோர் அலை உருவாவதற்கு இடமளிக்ககூடாது. குறிப்பாக மற்றுமொரு அலை உருவாவதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்” - என்றார். (இ)

# விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கொடிகாமம், செப். 16

தென்மராட்சி, கொடி காமம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கொடிகாமம், இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த ராஜன் சிந்துஜன் (வயது 24) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இயற்றாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 09.30 மணியளவில் குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது , மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ - 03)

# மலையக கோட்டையை குறி வைக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, செப். 16

ஐக்கிய தேசியக் கட்சியின், கிராமிய மட்டத்திலான அரசியல் பொறிமுறையை பலப்படுத்துவதற்கான வேலைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம், தவிசாளர் வஜிர அபேவர்தனவின் வழிகாட்டலுடன் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றதென என கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி புதிய தொகுதி அமைப்பாளர்களும், இணைப்பாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், மலையகத்திலிருந்து இளைஞர்களை உள்வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அரசியல் கோட்டைகளுள் மலையகமும் ஒன்று. எனினும், அக்கட்சி இரண்டாக பிளவுபட்டதன் பின்னர் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமித்தனர்.

இந்நிலையிலேயே மலையகத்தில் மீண்டும் காலூன்றுவதற்கான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் மலையகத்துக்கான களப் பயணமும் ஆரம்பமாகவுள்ளது. (இ)

# மத்திய வங்கியின் ஆளுநர் நியமனத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு!

கொழும்பு, செப். 16

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு இடைக்கால தடை விதிக்கக் கோரி, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

பிணைமுறி மோசடி வழக்கு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரையில் அஜித் நிவாட் கப்ராலின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அஜித் நிவாட் கப்ரால் தொடர்பாக பல உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

விசாரணை அறிக்கையின் வெளிப்பாடுகளில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அவர் மீண்டும் ஆளுநராக நியமிக்கப்பட்டால் மத்திய வங்கியிலுள்ள சான்றுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

ஜனாதிபதி விசாரணை அறிக்கையில் அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படவேண்டும்.



மேலும், நிதி சட்டத்தின் பிரிவு 12 இன்படி அஜித் நிவாட் கப்ரால் எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (இ)

# மக்களுக்கு நிவாரணங்களை வழங்க பஸிலுக்கு கால அவகாசம் வேண்டும்

## இப்படி கூறுகின்றார் சாகர காரியவசம் எம்.பி.




கொழும்பு, செப். 16

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவின் கைகளில் அலாவுதீனின் அற்புத விளக்கு இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பி. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்டதுடன் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் எனக் கூறிய போதிலும் அவ்வாறான எதனையும் காண முடியவில்லை என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சாகர காரியவசம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்குக்கால அவகாசம்வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கினால் அவர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவார்.

அடுத்த தேர்தலுக்கு முன்னதாக சகல சவால்களையும் வெற்றிகொண்டு அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம்.

எதிர்வரும்தேர்தலில்அமோக வெற்றியீட்டும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தேர்தலுக்குச் செல்ல முன்னர் நாட்டின் நிலைமை முற்று முழுதாக மாற்றம் பெற்றிருக்கும்” - என்றார். (இ)



## டொல்பின் வேட்டையால் இரத்த நிறமானது கடல்!

கோபன்காகன், செப். 16

ஒரேநாளில் 1,428 டொல்பின் மீன்கள் டென்மார்க்கில் வேட்டையாடப்பட்டன. பாரம்பரியத்தின் பெயரால் நடக்கும் இந்த வேட்டைக்கு பல்லுயிர் பாதுகாப்பு அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

டென்மார்க்கின் - பாரோ தீவுகளில் வேட்டைத் திருவிழா இடம்பெற்றது. இந்த வேட்டையில் திமிங்கலங்கள், டொல்பின்களை வேட்டையாடுவது வழக்கம். இதன்படி, கடந்த கடந்த ஞாயிற்றுக்கிழமை வேகப்படகுகள் மூலம் டொல்பின், திமிங்கலங்களை கரைகளுக்கு கலைத்து அவை நீந்தமுடியாது தத்தளிக்கும்போது வேட்டையாடிகள் அவற்றின் வயிற்றுப் பகுதியை கூர்மையான கத்திகளால் கிழித்து வேட்டையாடினர்.

டொல்பின்களிலிருந்து பெருக்கெடுத்த இரத்தத்தால் கடல்நீர் செந்நிறமாக மாறியது. இதைத் தொடர்ந்து, வேட்டையாடிய டொல்பின்கள் உள்ளூர் மக்களுக்கு உணவுக்காக வழங்கப்பட்டன.

டொல்பின் வேட்டை பதிவுகளின்படி, 1940ஆம் ஆண்டு 1,200 டொல்பின்கள் ஒருநாளில் கொல்லப்பட்டமையே அதிகமாக இருந்தது. இந்த நிலையில், முன்னெப்போதுமில்லாதவாறு 1,400ஐ கடந்த டொல்பின்கள் வேட்டையாடப்பட்டுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

இந்த வேட்டைக்கு பல்லுயிர் பாதுகாப்பு அமைப்புகள், உள்ளூர்வாசிகள் என இரு தரப்பினரும் இந்த வேட்டைக்கு எதிராகத் தற்போது குரல் எழுப்பி வருகின்றனர்.



## ரஷ்யாவின் ஜனாதிபதியாக செர்கெய்க்கு புடின் ஆதரவு!

மொஸ்கோ, செப். 15

ரஷ்யாவின் அடுத்த ஜனாதிபதியாவதற்கு பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் ஷொய்குவுக்கு தற்போதைய ஜனாதிபதி புடின் ஆதரவளிக்கிறார் என்று கூறப்படுகின்றது.

புடின், கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று தடவைகள் ஜனாதிபதியாகவும், ஒரு தடவை பிரதமராகவும் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வருகின்றார். இந்த நிலையில் 2024ஆம் ஆண்டு ரஷ்ய ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் புடின் போட்டியிடமாட்டார் என்று கூறப்படுகின்றது. எனினும், இது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில், புடினுக்கு பதிலாக பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் ஷொய்கு போட்டியிடுவார் என்று கூறப்படுகின்றது. இதற்கு 70 வயதான புடின் நரம்பியல் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளமையே காரணம் என்று கூறப்படுகின்றது.

செர்கெய் ஷொய்கு பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். துவா பிராந்தியத்தை சேர்ந்தவர். 1990களில் அரசியலுக்கு வந்த செர்கெய் கிரிமியா இணைப்பு விவகாரம், சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் ஆட்சியை காப்பாற்றுவதில் பெரும் பங்கு வகித்தவர்.

66 வயதான இவர், ஜனாதிபதி புடினுக்கு மிகமிக நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஐ)

காலநிலை மாற்றத்தால்

# 21 கோடி பொது மக்கள் வாழிடங்களை இழப்பர்

### தெற்காசிய - பசுபிக்கில் 4.9 கோடி பேர் இடம்பெயர்வர்

வாஷிங்டன், செப். 16

காலநிலை மாற்றத்தால் 21 கோடியே 60 இலட்சம் மக்கள் வாழ்விடங்களை இழக்கும் அபாயம் உள்ளது என்று உலக வங்கி எச்சரித்துள்ளது. அத்துடன், தெற்காசியா மற்றும் பசுபிக் பகுதியை சேர்ந்த 4 கோடியே 90 இலட்சம் மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்படும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.



காலநிலை மாற்றத்தால் உலகம் முழுவதும் பெரும் இயற்கை பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. இனி அடிக்கடி இயற்கை பேரிடர்கள் உலகை அழிக்கும் என்று ஐ.பி.சி.சி. அறிக்கை வெளியிட்டிருந்தது. இந்த நிலையிலேயே உலக வங்கி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது குறித்து உலக வங்கி வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், “2050ஆம் ஆண்டுக்குள் 21 கோடியே 60 இலட்சம் மக்கள் சொந்த நாட்டுக்குள் இடம்பெயர்வர். காலநிலை மாற்றத்தால் உணவு தானிய உற்பத்தி, மீன் பிடித் தொழில் உள்ளிட்டவை பெரும் பாதிப்புக்கு உள்ளாகும்.

மேலும், இந்த சிக்கலால் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் வளரும் நாடுகளில் உள்ள மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்வார்கள் எனவும் இதனைத் தடுக்க உடனடியாக கரியமில வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்”, என்றுள்ளது.



தியனன்மென் படுகொலை

## நினைவுகூர்ந்தவர்களுக்கு 10 மாதங்கள் வரை சிறை!

ஹொங்கொங், செப். 16

தியனன்மென் சதுக்கப் படு கொலையை நினைவுகூர்ந்த ஹொங் கொங் ஜனநாயக சார்பு ஆர்வலர்கள் 9 பேருக்கு 6 முதல் 10 மாதங் கள் வரை சிறைத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பங்கேற்ற குற்றத்தை ஏற்றுக்கொண்ட 12 பேரில் இவர் கள் அடங்குவர். 3 பேருக்கு ஒத்தி வைக்கப்பட்ட தண்டனை வழங் கப்பட்டது.

சீனாவில், கடந்த 1989ஆம் ஆண்டு மாணவர் புரட்சி இடம் பெற்றது. இந்தப் புரட்சியை சீன அரசு பலோத்காரமாக அடக்கியது. இதில் 10 ஆயிரத்துக்கும் மேற் பட்டவர்கள் கொல்லப்பட்டனர். தியன்மென் சதுக்க படுகொலை என்று வர்ணிக்கப்படும் இந்த படுகொலை ஜூன் 4ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த நினைவுகூரலை நடத்தி சீனா தடை விதித்து வருகின்றது.

இந்த நிலையில், ஜனநாயக உரிமையை வலியுறுத்தி போராடி வரும் ஹொங்கொங் மக்கள் இந்த நினைவேந்தலை ஆண்டுதோறும் நினைவுகூருகின்றனர். இந்த நிலை யில், கோவிட் - 19 தொற்றை காரணம் காட்டி கடந்த ஆண்டு நினைவுகூரலுக்கு தடை விதிக்கப் பட்டது. ஆனால், தடையை மீறி பல்லாயிக்கணக்கானோர் கூடி நினைவுகூர்ந்தனர். தொடர்ந்து இந்த ஆண்டும் சிலர்கூடி நினைவு கூரலை நடத்தினர்.

இதையடுத்து, சீன அரசின் உத்தரவின்பேரில் ஹொங்கொங் ஆட்சியாளர்கள் நினைவேந்தலை முன்னெடுத்தவர்களை கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்
பட்ட அல்பேர்ட் ஹோ விழிப்பு ணர்வு அமைப்பாளர் ஹொங்கொங் கூட்டணியின் முன்னாள் துணை தலைவர் இவர் இந்த நிகழ்வில் பங்கேற்றமைக்காக 10 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. 4

முன் னாள் ஹொங்கொங் சபை உறுப்பினர்களான எடி சூ, மனித உரிமைகள் முன்னணியின் முன்னாள் தலைவர் பிகோசான் ஆகியோருக்கும் சிறை விதிக்கப் பட்டது. (ஐ)

## அமெரிக்காவில் விரைவில் ‘டெல்டா’ தாக்கம் உயரும்!

வாஷிங்டன், செப். 16

“அமெரிக்காவில் டெல்டா திரிபால் ஏற்பட்டிருக்கும் புதிய கோவிட் - 19 அலை விரைவாக உச்சம் தொடும் கவனக்குறைவாக இருக்க வேண்டாம்“ என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக அவசர மருத்துவத்துறையின் துணை பேராசிரியர் பக்தி ஹன்சோதி தெரிவிக்கையில்,

அமெரிக்காவில் கடந்த மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் ஏற்பட்ட கோவிட்- 19 அலை முடிவடைந்திருப்பது சற்று நிம்மதியை அளிக்கிறது. ஆனால், தற்போது இந்தியாவை போன்றே அமெரிக்காவிலும் ஒரே மாதிரியான கோவிட் தொற்று நிலை தொடர்வதை காண முடிகிறது.

அமெரிக்காவில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக கடந்த 13ஆம் திகதி வரையான ஏழு நாட்களில், பாதிப்பு ஒரு இலட்சத்து 72 ஆயிரமாகப் பதிவாகியுள்ளது தினமும் 1,800 பேர் உயிரிழக்கின்றனர். தீவிர தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமெரிக்காவில் டெல்டா திரிபால் ஏற்பட்டிருக்கும் புதிய கோவிட் அலை விரைவாக உச்சம் தொடும். மக்கள் கவனக்குறைவாகவோ அலட்சியமாகவோ இருக்க வேண்டாம்”, என்றார். (ஐ)

## மேலும் இரு ஏவுகணைகளை பரிசோதித்தது வடகொரியா!

சியோல், செப். 16

வட கொரியா தனது கிழக்கு கடற்கரை பிராந்தியத்திலிருந்து நேற்று புதன்கிழமை இரண்டு அணு ஆயுதத்தை சுமந்துசென்று இலக்கை தாக்கவல்ல பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியதாக தென் கொரியாவின் கூட்டுத் தலைமை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

வட கொரியாவின் கிழக்கு கடலோர பிராந்தியத்தில் இருந்து ஏவுதல் நடந்தது. அது ஏவுகணையாக இருக்கலாம் என ஜப்பானும் தெரிவித்துள்ளது.

இது மூர்க்கத்தனமான நடவடிக்கை. பிராந்தியத்தில் அமைதியை சீர்குலைத்து அச்சுறுத்தல்விடும் நோக்கம் கொண்டது என ஜப்பானின் பிரதமர் யோஷிஹிட் சுகா இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

ஏவுகணைகள் எங்கு வீழ்ந்தன? அவற்றின் வீச்சு எல்லை என்ன? என்பது குறித்து சரியாகத் தெரியவில்லை.

1,500 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கக்கூடிய திறன் கொண்ட புதிய ஏவுகணைகளை வட கொரியா கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஏவி பரிசோதித்தது. இதனை கொரிய அரச ஊடகமான கே.சி.என்.ஏ. உறுதி செய்தது. (ஐ)

# ஓய்வை அறிவித்தார் மலிங்க!



கொழும்பு, செப். 16

இருபது - 20 கிரிக்கெட்டில் உலகின் மிகச்சிறந்த பந்துவீச்சாளராகப் புகழப்படும் லசித் மலிங்க சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வை அறிவித்தார்.

தனது தனிப்பட்ட யூ - ரியூப் சனல் மூலம் அவர் இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டார்.

2004ஆம் ஆண்டு சர்வசேத கிரிக்கெட்டில் அறிமுகமான மலிங்க, 30 டெஸ்ட், 226 ஒருநாள், 84 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். மூன்றுவிதமான போட்டிகளிலும் மொத்தமாக 546 விக்கெட்களை அவர் கைப்பற்றியுள்ளார்.

இலங்கை அணியின் தலைமையை 2014ஆம் ஆண்டு இவர் பொறுப்பேற்றிருந்தார். இருபது - 20 கிரிக்கெட்டில் கடைசி ஓவர்களை வீசுவதில் பெரும் நிபுணராக இன்றுவரை மலிங்க மதிக்கப்படுகின்றார். இருபது - 20 போட்டிகளில் மட்டும் அவர் 107 சர்வதேச விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். அத்துடன், இருமுறை ஹட்ரிக் சாதனையையும் படத்துள்ளார்.

தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டு வந்த மலிங்க, 2011ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து விளையாடி வந்த அவர் இறுதியாக 2020 மார்ச்சில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் விளையாடியிருந்தார். தற்போது போட்டிகளில் விளையாடாத நிலையில் அவர் ஓய்வை அறிவித்துள்ளார்.

மலிங்க ஐ.பி.எல். போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். 170 விக்கெட்களை கைப்பற்றிய அவர் இன்று வரை ஐ.பி.எல்லில் அதிக விக்கெட்களை கைப் பற்றிய வீரர் என்ற பெருமையை தக்க வைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



தென்னாபிரிக்காவுடனான ரி-20:

# சொந்த மண்ணில் பரிதாபமாக தொடரை இழந்தது இலங்கை!

கொழும்பு, செப். 16

குயின்ரன் டி கொக் - ரீசா ஹென்றிக்ஸின் சிறப்பான துடுப்பாட்டத்தால் இலங்கைக்கு எதிரான மூன்றாவது இருபது -20 போட்டியை 10 விக்கெட்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்கா.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்கா ஒருநாள் தொடரை இலங்கையிடம் இழந்த நிலையில், 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடியது. முதலிரு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்ற நிலையில், இரு அணிகளும் நேற்று முன்தினம் மூன்றாவது போட்டியில் பொருதின.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த பொட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்க்களை இழந்து 120 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. குஷல் ஜனித் பெரேரா 39 ஓட்டங்களையும், சாமிக கருணாரத்ன 24 ஓட்டங் களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் போர்ட்ரியூன், ரபடா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், மார்க்ரம், மஹராஜ், முல்டர் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

121 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 14. 4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றி பெற்றது. தொடக்க வீரர்களான டி கொக் ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 56 ஓட்டங்களையும், ஹென்றிக்ஸ் 7 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா இருபது - 20 தொடரை முழுமையாகக் கைப்பற்றியது. இலங்கை அணி தொடர் ஒன்றை சொந்த மண்ணில் இலங்கை அணி தொடர் ஒன்றை முழுமையாக இழப்பது இதுவே முதல்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

போட்டியின் ஆட்டநாயகனாவும், தொடரின் ஆட்டநாயகனாகவும் டிகொக் தெரிவானார். (ஐ)



# சென்னை அணிக்கு பின்னடைவு!

டுபாய், செப். 16

மும்பை அணிக்கு எதிரான முதல் போட்டியில் சென்னை அணியில் டு பிளசிஸ், சாம் கரன் ஆகியோர் இடம்பெற மாட்டார்கள். இதனால், சென்னை அணிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் தொற்று அச்சத்தால் இடைநிறுத்தப்பட்ட ஐ.பி.எல். இருபது - 20 போட்டி தொடரின் மிகுதிப் போட்டிகள் வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகின்றது.

முதல்நாளில் சென்னை - மும்பை அணிகள் மோதவுள்ளன. இந்த நிலையிலேயே சென்னையின் முக்கியமான வீரர்களான டு பிளசிஸ், சாம் கரன் ஆகியோர் விளையாட மாட்டார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

சி.பி.எல். இருபது - 20 போட்டியில் தலையில் காயமடைந்ததால் ஓய்வில் இருக்கும் டு பிளசிஸ் ஐ.பி.எல்லில் இன்னும் சில போட்டிகளில் பங்கேற்க மாட்டார். இதேபோல, இங்கிலாந்து வீரரான சாம் கரன் நேற்றைய தினமே டுபாய் சென்றார். அவர் 6 நாள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும் என்பதால் முதல் போட்டியில் அவரும் பங்கேற்க மாட்டார். இது சென்னை அணிக்கு இந்தப் போட்டியில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது. (ஐ)



# ஐ.பி.எல். பெரும் ஏலம்: ஒக். 17இல் நடத்த முடிவு

டுபாய், செப். 16

ஐ.பி.எல். தொடரின் புதிய அணிகளுக்கான ஏலத்தை ஒக்ரோபர் 17ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

டுபாயில் வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் பகுதி எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்த நிலையில், 2022ஆம் ஆண்டுக் கான ஐ.பி.எல். தொடரில் இரு அணிகள் மேலதிக மாக சேர்க்கப்படவுள்ளன. இந்த நிலையில், தக்கவைக்கப்படும் 4 வீரர்கள் தவிர ஏனைய வீரர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு பெரும் ஏலம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பெரும் ஏலத்தை ஒக்ரோபர் 17ஆம் திகதி டுபாயிலேயே நடத்த ஐ.பி.எல். நிர்வாகம் முடிவு செய்துள்ளது. (ஐ)

# நீல நிற சீருடைக்கு மாறிய பெங்களூர்!



அபுதாபி, செப். 16

டுபாயில் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரில் நீல நிறத்திலான புதிய சீருடையில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி களமிறங்கவுள்ளது.

இந்தியாவில் நடந்த ஐ.பி.எல். தொடர் தொற்று பரவலால் இடைநிறுத்தப்பட்டது. இந்தத் தொடர் வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் மீள ஆரம்பமாகிறது.

இதில், 20ஆம் திகதி கொல்கொத்தா அணிக்கு எதிராக கோலி தலைமையிலான பெங்களூர் அணி களமிறங்கவுள்ளது.

10 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுள்ள பெங்களூர் அணி இந்தப் போட்டியில் களமிறங்கும் போது நீல நிற சீருடையில் களமிறங்கவுள்ளது.

கொரோனாவில் இருந்து மக்களை பாதுகாக்க போராடும் இந்தியாவில் உள்ள முன்கள பணியாளர்களை கௌரவிக்கும் வகையிலேயே இந்த புதிய சீருடையை அணிந்து விளையாடவுள்ளனர் என்று அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

*மத்திய வங்கியின் புதிய ஆளுநருக்கான*

# நியமன கடிதத்தை நேற்று பெற்றுக்கொண்டார் கப்ரால்



கொழும்பு, செப். 16

இலங்கை மத்திய வங்கியின் 16ஆவது ஆளுநராக நியமிக்கப் பட்டுள்ள அஜித் நிவாட் கப் ரால், நேற்று முற்பகல் ஜனாதி பதி அலுவலகத்தில் வைத்து, ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ விடமிருந்து, தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

பிரசித்திபெற்ற பட்டயக் கணக்காளரான அஜித் நிவாட் கப்ரால், இதற்கு முன்னர் அமைச்சின் செயலாளராகவும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகவும் கடமையாற்றி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நியமனக் கடிதம் பெறும் நிகழ்வில், ஜனாதிபதி யின் செயலாளர் பி.பீ.ஜயசுந்த ரவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அ’புரம் சிறையில் நடந்த கேவலம் அராஜக நிலைக்கு எடுத்துக்காட்டு

*எதிர்க்கட்சி தலைவர் சஜித் சீற்றம்*



**கொழும்பு, செப்.16**

**“அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று அநாகரிகமாக நடந்துகொண்ட இராஜாங்க அமைச்சரின் செயலை வன்மையாகக் கண் டிக்கின்றேன். இந்தக் கேவலமான சட்டவிரோத செயல் நமது நாட்டின் அராஜக நிலைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.”**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலை வரும் ஐக்கிய மக்கள் சக் தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக் குள் மதுபோதையில் கைத்துப் பாக்கியுடன் சென்ற சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு இரா ஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத் தலை விடுத்துள்ளார். இந்தச் சம்பவத்துக்கு அரசியல்வாதி கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வின் முகநூல் பதிவு வருமாறு:-

“அநுராதபுரம் சிறைச்சா லைக் கட்டடத் தொகுதியில் இராஜாங்க அமைச்சரின் இழி வான மற்றும் சட்டவிரோத மான நடத்தையை நான் வன் மையாகக் கண்டிக்கிறேன். இந் தக் கேவலமான சட்டவிரோத செயல் நமது நாட்டின் அராஜக நிலைக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

எங்கள் தாய்நாட்டில் வாழும் அனைத்து குடிமக்க ளின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசுக்குக் கடப்பாடு உள்ளது.

இந்தச் சட்டவிரோதமான மற்றும் கேவலமான செயல் நமது நாட்டில் மனித உரிமை களின் நிலைமை வேகமாக குறைந்து வருவதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

இந்த இராஜாங்க அமைச் சரை உடனடியாகப் பதவியில் இருந்து நீக்குமாறு நான் ஜனா திபதியைக் கேட்டுக்கொள் கின்றேன்” - என்றுள்ளது. (இ)

# பௌத்தம் பற்றி வகுப்பெடுக்கும் அரசின் வக்கிர மனசு இதுவா?

*அ’புரம் சிறைக்குள் இராஜாங்க அமைச்சரின் நடத்தை பற்றி மனோ எம்.பி. இப்படி கேள்வி*



கொழும்பு, செப். 16

“பௌத்தம் பற்றி நாட்டுக்கு தினந்தோறும் வகுப்பெடுக்கும் இந்த அரசின் மிக வக்கிரமான இனவாத மனசை அநுராதபுரம் சிறைச்சாலை சம்பவம் காட்டுகின்றதா?

- இவ்வாறு கேள்வி எழுப் பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இது தொடர்பில் அவர் தனது ருவிட்டர், முகநூல் தளங்களில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:-

“இராஜாங்க அமைச்சர் ஒரு வர் அநுராதபுரம் சிறைக்கு சென்று, துப்பாக்கி முனையில், தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட செய்து அவமா னப்படுத்தி, பயமுறுத்தி உள் ளார். இது பாரிய மனித உரிமை மீறல், மனிதர்களின் ஆத்ம கௌவரத்தை அவமா னப்படுத்தும் ஒரு செயல், ஒரு கிரிமினல் செயல்.

பௌத்தம் பற்றி நாட்டுக்கு தினந்தோறும் வகுப்பெடுக்கும் இந்த அரசின் மிக வக்கிரமான இனவாத மனசை இது காட்டு கின்றதா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதற்குப் பதில் கூற வேண்டும்” - என்றுள்ளது. (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 24 - 08 - 1936



உதிர்வு 12 - 09 - 2021

### திருமதி கந்தசாமி தையல்நாயகி (அழகு)

*(கொண்டலடி - கனடா)*

யாழ். கொண்டலடி, கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Markham, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட விஸ்வகுல திருமதி கந்தசாமி தையல்நாயகி அவர்கள் 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார், காலஞ்சென்ற சுவாமிநாதர்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, தங்கராசா, இராசதுரை மற்றும் இந்திராணி ஆகி யோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா நடராஜா, சுப்பிரமணியம், லோகசுந்தரம், இராசரத்தினம் மற்றும் விமலாதேவி, செல்வராணி, கணேசலிங்கம் ஆகியோரின் மைத் துனியும், பிறேமச்சந்திரன் (இலங்கை), ஜெயச்சந்திரன் (கனடா), ஞானச்சந்திரன் (நோர்வே), பாலச்சந்திரன் (இலங்கை), இராமச் சந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தேவச்சந்திரன், ஜீவச்சந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெபிச்சந்திரன், புவிச்சந்திரன் (ஜேர்மனி), செல்வச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லங்காதேவி, குணவதி, சுகந்தினி, புஷ்பரஞ்சனா, ராகினி, மஞ்சுளா, மணிமேகலை, பொற்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், வசந்தலா, சந்திரகலா, பிரபாகர், வற்சலா, பிரஜாந், ஜெயரதன், சதீஸ், நிவேதன், திவேதன், துளசித், நிரூபன், நிதுலா, சமிலா, சுதர்சன், செந்துஜன், இந்துசா, சஜந்தன், ஜெனினா, அபிநயா, பாலகுமரன், சாஜித், ஆதியா, வினுசா, சாருமதி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், ஆருஸ், கமிதா, அபிரா, சதுஜா, திவ்யா, பவின், பிரதிஷா, பிரவீனா, மேகஜா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 17.09.2021 வெள்ளிக்கிழமை அன்று மு.ப. 09:00 மணியளவில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

*சண்முகா (மகன்) 0778483810*
*பவா (மகன்) - 0016476696021*
*துரை (மகன்) - 004799713980*
*ஜெயா (மகன்) - 004917674978921*
*ஜீவா (மகன்) - 004917636397814*
*ராஜூ (மகன்) - 004917634127291*
*ரூபன் (மகன்) - 0016475308871*
*சந்திரன் (மகன்) - 0773207834*
*பிரபா (பேரன்) - 0776029417*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 19 - 09 - 1950



உதிர்வு 14 - 09 - 2021

### பெரியசாமி செல்வராஜா

*இந்தியா-மட்டக்குளி*

சோலாம்பட்டி கிராமம் இந்தியாவைப் பிறப்பிடமாகவும் மட்டக் குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியசாமி செல்வராஜா 14.09.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கமலா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெரியசாமி - குப்பாயி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிச்சையாவின் அன்பு மருமகனும், சுப்பம்மாவின் அன்பு மரு மகனும், அனிதா, சுபா அகல்யா, ரினோ ஆகியோரின் அன்புத் தந்தையும், டொனால்ட், துசாந்த், பிரகாஷ் ஆகியோரின் அன்பு மாம னாரும், அஷோன் அவர்களின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.09.2021) புதன் கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்புகளுக்கு:**

*துஷாந்த் (மருமகன்) - 072 218 8888*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## அரசியல்...

சிறைக் கைதிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக அமைச்சர் நாமல் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த சிறைத்துறை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்கு துப்பாக்கியைக் காட்டி தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிட வைத்த விவகாரம் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெற்று வரும் வேளையில்-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில்-

அரசின் இராஜாங்க அமைச்சர் இவ்வாறு நடந்துகொண்டமை இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலியில் இருந்து விடுத்த பணிப்புரையை அடுத்து சர்ச்சைக்குரிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

ஆயினும் இந்தச் சம்பவத்தால் அரசின் மீது எழுந்த கடும் விமர்சனங்கள் இன்னும் தணிந்தபாடில்லை.

இந்நிலையில் இந்தச் சம்பவம் குறித்து முழுமையாக ஆராயும் பொருட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளிடம் இந்தச் சம்பவம் தொடர்பில் கேட்டறியவுள்ளார் என அரச வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (அ)

## ஒரு வயது குழந்தை...

கிளிநொச்சியில் ஒருவருமாக தொற்றால் நேற்று நால்வர் உயிரிழந்தனர்.

தவிர, வடக்கு மாகாணத்தில் நேற்று 184 பேருக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர் பரிசோதனையில் 59 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பரிசோதனை முடிவிலேயே இந்த விடயம் வெளியானது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் தொற்றுக்கு உள்ளான ஒரு வயதும் 3 மாதமும் நிரம்பிய குழந்தை தொற்றால் உயிரிழந்தது.

இதேபோன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தையை பிரசவித்த தாயார் ஒருவரும் உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் அளவெட்டியை சேர்ந்த 42 வயது பெண்ணாவார்.

அத்துடன், யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனையில் 51 வயது ஆண் ஒருவர் தொற்றால் உயிரிழந்தார். இதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் 72 வயது பெண் ஒருவர் கொரோனாவால் மரணமானார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் என 28 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இதில், போதனா மருத்துவமனையில் 11 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 7 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 4 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 4 பேர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றலில் 2 பேர் ஆவர். தவிர, காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேர், வவுனியா பொது மருத்துவமனையில் 2 பேர், புளியங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என வவுனியா மாவட்டத்தில் 13 பேருக்க தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மல்லாவி ஆதார மருத்துவமனையில் 7 பேர், பொது மருத்துவமனையில் 4 பேர் என முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 பேரும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 2 பேரும், இரணைமடு விமானபடை முகாமில் இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## ராஜினாமா...

புடைய அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 132 பேர்...

ழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 11 ஆயிரத்து 699 ஆக அதிகரித்துள்ளது என அரச தக வல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 132 பேரில் 66 ஆண்களும், 66 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் ஆண் ஒருவரும், பெண் இருவரும் என மூவர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 18 ஆண்கள், 10 பெண்கள் என 28 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 101 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 47 ஆண்களும், 54 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## இந்திய...

திப்பு இடம்பெற்றது.

இந்தியாவுக்கான உயர் ஸ்தானிகராக நியமிக்கப்படும் ஒருவரை வெளிவிவகாரச் செயலாளர் சந்தித்துப் பேச்சு நடத்தும் சம்பிரதாயத்தின் அடிப்படையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

மிலிந்த மொறகொட போன்ற புகழ்பெற்ற, அனுபவம்வாய்ந்த ஒருவரை இலங்கையின் உயர் ஸ்தானிகராக வரவேற்பதில் இந்தியா மகிழ்ச்சியடைகின்றது என இதன்போது இந்திய வெளிவிவகாரச் செயலாளர் தெரிவித்தார்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் இதன்போது இருவரும் ஆராய்ந்தார்கள். இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்காக தன்னால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை இதன்போது மிலிந்த மொறகொட இந்திய வெளிவிவகார செயலாளரிடம் கையளித்தார்.

## தீர்மானமும்...

அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,

போர் குற்றங்களை நடத்தியதில் முக்கியமான நபராகவும், குற்றவாளியாகவும் இருக்கின்றவரே ஜனாதிபதியாக நாட்டை ஆட்சி செய்கிறார். இக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி, தீர்மானம் முழுமையாக மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே முடக்கப்படும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் முடக்கப்பட்டு இருக்கின்ற வரையில் பொறுப்புக்கூறல் என்ற விடயமே தமிழ் மக்களுக்கு சாத்தியமில்லை.

யுத்தக் குற்ற விசாரணையில், தமிழீழ விடுதலைப் புலிகள் போர் குற்றங்களில் ஈடுபடவில்லை. அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டால், உண்மைகளை வெளிக்கொண்டுவர தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி தயாராகவுள்ளது. இதனையே பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்திலும் தான் வலியுறுத்தினாரென அவர் இதன்போது குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் மீது விசாரணை நடத்தப்படுமானால் கருணா, பிள்ளையான், டக்ளஸ் மற்றும் புளொட் அமைப்பின்மீதும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

மேலும், அநுராதபுர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சுட்டுக்கொல்வேன் என சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அச்சுறுத்தியுள்ளார். இந்நிலையில் அவரை கைதிகளின் நலன்களை பாதுகாக்கும் ஒரு அமைச்சராக தொடர்ந்து வைத்திராது வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று சொன்னார். (ஐ)

## நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில்

# அமெரிக்க ஜனாதிபதியின் உதவியாளருக்கு விளக்கம்

வொஷிங்டன், செப் 16

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் காணாமல்போனோர் அலுவலகம் பற்றிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சிகள் குறித்து அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் ரவிநாத ஆரியசின்ஹ அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்பு உதவியாளருக்கு விளக்கமளித்துள்ளார்.

இதன்போது,காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகள் குறித்த அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைகள் மற்றும் பரந்த அளவிலான சிவில் சமூகத்துடன் ஈடுபாடு பற்றியும் அவர் விளக்கமளித்துள்ளார்.

கோவிட் நெருக்கடியின் போது, குறிப்பாக தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கியபோது, இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு அமெரிக்க அரசாங்கத்துக்கு ஆரியசின்ஹ நன்றி தெரிவித்துள்ளார். அமெரிக்க-இலங்கை உறவின் பன்முகத் தன்மையை வலியுறுத்திய தூதுவர், இரு நாடுகளும் குறிப்பாக வலுவான வர்த்தகம், மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய துறைகளில் வலுவான ஒத்துழைப்பைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கியை சிறைச்சாலைக்குள் எடுத்துவர அனுமதித்தது யார்?

## கைதிகளின் உரிமைகளுக்கான அமைப்பு

கொழும்பு, செப். 16

லொஹான் ரத்வத்தை அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகளை அச்சுறுத்திய விவகாரம் தொடர்பில் இன்று முறைப்பாடு செய்வதற்கு தாம் திட்டமிட்டிருப்பதாகவும், தமிழ்க் கைதிகளும் அவர்களுடைய பெற்றோரும் இதற்கு தமக்கு ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்திருப்பதாகவும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு அறிவித்திருக்கின்றது.

கொழும்பில் அவ்வமைப்பின் சார்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகச் சந்திப்பின்போதே இந்தத் தகவலை அவர்கள் தெரிவித்தார்கள். சிறைச்சாலை ஒன்றுக்குள் துப்பாக்கிகளை எடுத்துவருவதற்கு யாருக்கும் அனுமதியளிக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்த இவ்வமைப்பினர், அதனால் லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

துப்பாக்கியை சிறைச்சாலைக்குள் கொண்டுவருவதற்கு அனுமதியளித்தது யார் எனவும் கேள்வி எழுப்பியுள்ள இவர்கள், இது தொடர்பில் இன்று அவர்கள் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்வதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிதார்கள்.

# 5 ஆயிரம் பாடசாலைகள் முதற்கட்டமாக திறப்பு?

கொழும்பு, செப். 16

200க்கும் குறைந்த மாணவர்களை கொண்ட 5000 பாடசாலைகளை சுகாதார ஒழுங்கு விதிகளுக்கமைய இன்னும் இரண்டு வாரங்களின் பின் திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நாட்டில் 200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட சுமார் 5,000 பாடசாலைகளை முதலில் திறப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

## தமிழர் பிரச்னை...

காண உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. புதிய அரசமைப்பு ஊடாக இனப்பிரச்னைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் வலியுறுத்தியுள்ளோம்.

ஆரம்பத்தில் செயல்திறனுடன் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான நடவடிக்கைகள் தற்போது மந்தகரமான முறையில் உள்ளது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் இனங்களுக்கிடையில் பிரச்னை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு தீர்வு புதிய அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட வேண்டும். மாகாண சபை பலப்படுத்தப்பட வேண்டும்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் 2005 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் அப்போதைய ஜனாதிபதியாக பதவி வகித்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் "சர்வக்கட்சி தலைவர் மாநாடு " அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரையில் அவ்வறிக்கை செயல்படுத்தப்படவில்லை. அந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை தமிழ் - முஸ்லிம் கட்சிகளும் ஏற்றுக்கொண்டன - என்றார். (ஐ)

## சர்ச்சைக்குரிய...

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அனுப்பிய கடிதத்தை கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த திங்கள்கிழமை இரவு வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகள் சிலரை துப்பாக்கி காட்டி மண்டியிட வைத்தார் என லொஹான் ரத்வத்த மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதனை அடுத்து உடனடியாக அமைச்சுப் பதவியில் இருந்து விலகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சிறைச்சாலை நிர்வாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு அறிவித்திருந்தார்.

தற்போது இத்தாலியில் இருக்கும் பிரதமர், லொஹான் ரத்வத்தயுடன் நேற்றுக் காலை தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரை பதவி விலகுமாறு அறிவித்தார் எனவும் அதன் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டதாகவும் செய்தி வெளியாகியிருந்தது. இதேநேரம், லொஹான் ரத்வத்த மீதான குற்றச்சாட்டுகள் குறித்து முழுமை யான விசாரணைக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu




## நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவரும் திடீரென இராஜிநாமா

கொழும்பு, செப். 15

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கலாநிதி ஜே.மன்னப்பெரும திடீரென இராஜிநாமா செய்துள்ளார்.

தனது இராஜிநாமாக் கடி தத்தை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவிடம் அவர்கையளித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகத் தான் பதவியை இரா ஜிநாமா செய்கின்றார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சிவில் நிர்வாகத்தில் முக்கிய பதவிகளை வகிப்பவர்கள் தொடர்ச்சியாக இராஜிநாமா செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு
12 - 04 - 1964



உதிர்வு
10 - 09 - 2021

### செல்லையா யூலியன் றெறன்ஸ்

*(யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்)*

யாழ்ப்பாணம் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Berlin ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யூலியன் றெறன்ஸ் அவர்கள் 10.09.2021 வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - எலிச பெத் தம்பதியரின் பாசமிகு பேரனும், மரியநாயகம் செல் லையா - காலஞ்சென்ற மேர்சி லீசியா(ரதி) தம்பதியரின் பாசமிகு புதல்வரும், திரு.திருமதி நவரட்ணராஜா தம் பதியரின் அன்பு மருமகனும், ஜெசிந்தா அவர்களின் அன் புக் கணவரும், ஜஸ்வந்(மெசி), ஜஸ்வந்தி(லீசியா) ஆகி யோரின் ஆருயிர்த் தந்தையும், காலஞ்சென்ற அன்ரன், அகஸ்ரின், தர்மசீலன், மனோகரசீலன், காலஞ்சென்ற அனஸ்ரின், அல்வினஸ், றதினி ஆகியோ ரின் பாசமிகு சகோதரரும்,திருச்செல்வம்(திரு), கீதா, ஜெயசீலி, ஜெய சீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயா (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவராசா(பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புச் சகலனும் ஆவார்.அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

பார்வைக்கு
Wednesday, 15 Sep 2021 3:00 PM - 4:00 PM
Eschke Bestattungsfuhrwesen GmbH & Co.KG
Lauterstraße 33, 12159 Berlin, Germany

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
*மனோகரசீலன்(சகோதரன்)*
*+447985308732*

தகவல்:
**குடும்பத்தினர்**

# வடக்கு, கிழக்கு நிலை மலையக மக்களுக்கும்

## வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, செப்.16**

**“வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் அந்த மக்களின் காணிப் பிரச்னை தொடர்பாக எவ்வாறு கசப்பான அனுபவங்கள் நடைபெற்றதோ அதே போன்று மலையகத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது.”**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் பதுளை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களி டம் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

“மலையக மக்களினது காணிகள் அபகரிக்கப்படுகின்றதா? பெருந் தோட்டத் தொழிலாளர்களது எதிர்காலம், மலையக மக்களி னுடைய காணி நிலம் அபகரிக் கப்பட்டு விடுமோ? என்ற ஒரு சந் தேகம் ஏற்பட்டுள்ளது.

இன்றைக்குப் பெருந்தோட்டங் களில் கால்நடை அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு பல்லாயிரக்கணக் கான காணிகளைக் குறிவைத்து - எமது இருப்புக்கு ஓர் ஆபத்தை ஏற்படுத்தி - பல குடியிருப்புகளை அங்கு ஏற்படுத்தி - மலையகத்தி லுள்ள அமைதியான சூழலை களங்கப்படுத்தி ஒரு பிரச்னைக்கு ஆயத்தமாகின்றார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

அதற்குரிய ஆரம்பகட்ட நடவ டிக்கைகள் கண்டி மாவட்டத்தில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

மலையக மக்களினுடைய காணி நிலம் அபகரிக்கப்பட்டு விடுமோ என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக் கின்றது” - என்றார். (இ)

# பொலிஸாரின் சுற்றிவளைப்புகளில் போதைப்பொருட்களுடன் ஐவர் கைது

கொழும்பு, செப். 15

நாடளாவிய ரீதியில் மேற்கொள் ளப் பட்ட சுற்றி வளைப்புகளில் போதைப் பொருட்களுடன் 5 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலை மையகம் தெரிவித் துள்ளது.

கடுவெல பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கொத்தலாவல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பில் 2 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடுவெல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே கைதுசெய்யப் பட் டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் பார்க் வீதி பிர தேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் 3 கிராம் 250 மில்லிகிராம் கேரள கஞ்சா வுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயது நபரே கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கஹவத்த பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் 18.75 மில்லி லீற்றர் மதுபானம், 135 லீற் றர் கோடா, செப்புக்கம்பிகள் உள்ளிட்டவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கஹவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது டைய நபரே கைதுசெய்யப்பட் டுள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட ஹல் ஒழுவ பிரதேசத்தில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பில் 2 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பல்லேகம ஹல்ஒழுவ பிரதேசத் தைச் சேர்ந்த 28 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் 30.750 மில்லிலீற்றர் மதுபானம், 2 செப்புக் கம் பிகள், எரிவாயு அடுப்பு 01, எரி வாயு சிலிண்டர் 01, இரும்பு பீப் பாய் 01 என்பவற்றுடன் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 72 ஆயிரம் பேர் இதுவரை சிக்கினர்



கொழும்பு, செப். 16

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டதிவிமுறைகளை மீறிய குற் றச்சாட்டில் மேலும் 646 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 18 வாகனங்கள் கைப்பற்றப்பட் டுள்ளன.

இதற்கமைய இதுவரை தனி மைப்படுத்தல் சட்டவிதிமுறை களை மீறிய குற்றச்சாட்டில் 72 ஆயிரத்து 113 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் நிஹால் தல்துவ ஊடகங்க ளிடம் தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத் தில் உள்நுழையும் மற்றும் வெளி யேறும் 13 பிரதேசங்களில் நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்ட சோதனை நட வடிக்கையின்போது தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறை களை மீறி 303 வாகனங்களில் வந்த 198 பேர் திருப்பி அனுப்பப்பட் டுள்ளனர்.

114 பொலிஸார் அதிகாரி கள், 73 இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து இந்தச் சோதனை நடவ டிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத் தில் நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 283 பொலிஸ் அதி காரிகள் இணைந்து மேற் கொண்ட சோதனை நடவடிக் கையின்போது அனுமதிப் பத்திர மின்றி 735 வாகனங்களில் பயணித்த 1,130 பேர் திருப்பி அனுப்பப்பட் டுள்ளனர்” - என் றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர்: உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-என்றென்றும் புன்னகை.இனிமேல் இப்படித்தான் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-டிக்கிலோனா



**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்